



# ரமணோதயம்

அக்டோபர் 2020

காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்

விலை ₹ 20



**ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 20 ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2020

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஶ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஶ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2020


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | உதாரண புருஷராம் உத்தமர் அண்ணா | ராம் மோஹன் | 16 |
| 3 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 19 |
| 4 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 24 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 29 |
| 6 | ரமண மையங்களை நோக்கி... | | 34 |
| 7 | சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்-2 | வி. நிரஞ்சன் | 41 |
| 8 | இனிவரும் திருநாட்கள் | | 44 |
| 9 | பகவான் ரமணருடன் ஒரு செல்ஃபி | பிர. கிரிதர ஜெகதீஷ் | 45 |
| 10 | முருகனார் என்னும் முத்தமிழ் ஞானி | சுந்தர்ராஜன் | 52 |
| 11 | அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 20 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 57 |
| 12 | தலைவனின் தன்மை என்ன என்பார்க்கு... | ஆகுரா | 68 |
| 13 | செய்திகள் | | 76 |


முன்அட்டை: அண்ணாமலையார் ஆலயத்தில் கம்பத்து இளையனார், கோபுரத்து இளையனார் மற்றும் பிச்சை இளையனார் என்னும் மூன்று முருகர் சந்நிதிகள் உள்ளன. பிச்சை இளையனார் சந்நிதியில் இருந்து அருணாசல தரிசனம்.

# ஆசிரியர் உரை

## மாங்காய்ப் பாலும் தேங்காய்ப் பாலும்

குதம்பைச் சித்தர் பாடல் ஒன்று. நேரடியாகப் பார்த்தால் குழப்பமாகவோ, நகைச்சுவையாகவோ இருக்கும்.

*மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்கு*
*தேங்காய்ப்பால் ஏதுக்கடி? – குதம்பாய்!*
*தேங்காய்ப்பால் ஏதுக்கடி?*

என்பதே இந்தப் பாடல். உண்மையில் ஞான அனுபவத்தைக் குறிப்பால் உணர்த்தும் மிகச் சிறந்த பாடல் இது.

பச்சை மாங்காயைக் கிளையில் இருந்து ஒடிக்கும்போது 'பால்' எனப்படும் சாறு கொட்டும். அது உண்மையில் பால் அல்ல. காம்பிலிருந்து வருகின்ற சாறு அது. அந்தப் பால் உதட்டின்மீது பட்டால் புண்ணாகிவிடும். வெறும் ஒரு சொட்டு பட்டாலே புண்ணாக்குகிற மாங்காய்ப் பாலையே முழுதுமாய் உண்டு மலை ஏறி அங்கே இருப்பவன் எவ்வளவு சக்திமானாய் இருக்க வேண்டும்? மாங்காய்ப் பால் உண்டவன் மலைமீது ஏறி அமைதியாயும் இருக்கிறானே? யார் அவன்?

பிறருக்குத் துன்பம் தருகின்ற ஒன்று, மாங்காய்ப்பால் இவனுக்குத் துன்பம் செய்யவில்லை. இதன் உள்பொருள் யாதெனில் நமக்கு வருகின்ற துன்பமெல்லாம் நாம் ஐந்து பொறிகட்கு ஆட்படுவதால் வருகின்றன.

*ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தினில் நீ இலையோ? அருணாசலா!*

அருணாசலா! நீ உள்ளே இருந்தால் இந்தப் பொறிகள் துன்பம் தரமாட்டாது அல்லவா! நாம் நமது ஐந்து பொறிகளின் கட்டுப்பாட்டில் அடங்கிச் செயல் படுகின்றோம். நமது ஐந்து பொறிகளும் மாங்காய்ப்பால் போன்றவை. அவை நம்மீது தொடர்பு கொண்டவுடனே புண்போன்ற துன்பத்தைத் தருகின்றன. இந்த மாங்காய்ப் பால் பட்ட புண்களை ஆற்ற தேங்காய்ப்பால் சாப்பிடுவதே மருந்து. ஐந்து புலன்களால் ஏற்படுகின்ற கர்மவினையாம் புண்ணை ஆற்றுவதற்கு பூஜை, ஜபம் போன்ற கர்மானுஷ்டங்களைச் செய்ய வேண்டும். ஆனால் பகவான் போன்ற ஞானிகள் இந்திரியங்களை, ஐம்பொறிகளை அடக்கி வெற்றி பெற்றவர்கள். எனவே மற்றவர்க்கு அவற்றால் ஏற்படும் துன்பங்கள் அவர்க்கு இல்லை.

இத்தகைய உயர்ந்த ஞானநிலையில் இருப்பவர்க்கு பூஜை, ஜபம் போன்ற கிரியைகள் எதுவுமே தேவை இல்லை. புண்ணை ஆற்றுகின்ற தேங்காய்ப்பால் போன்றவை இந்தக் கர்மங்கள். எதிலும் தன்முனைப்பு இல்லாமல், எல்லாச் செயல்களையும் நிஷ்காம்ய கர்மமாகச் செய்தவர் பகவான். வெயிலில் உடல் காயவந்து, மலையேறும் சுள்ளி பொறுக்கும் தாழ்குலப் பெண்கள் முதுகு குளிர குளிர்ந்த நீர் ஊற்றுவதிலிருந்து ஜகத்குரு சங்கராசாரியார் ஸ்ரீ நாராயண குரு போன்ற கற்றறிந்த மஹான்களின் சந்தேகங்களை நீக்குவதுவரை எல்லாவற்றையும் பற்றின்றி, அதே சமயம் முழுக் கவனத்துடன் செய்தவர் பகவான். எல்லாவற்றையும் கடந்த அவருக்கு எந்தவிதமான சம்பிரதாயக் கடமைகளையும் செய்யத் தேவையே இல்லை. "தேங்காய்ப் பால்" போன்ற கர்மங்களைக் கடந்து நின்றவர் அவர்.

சம்பிரதாயம், சடங்குகள், கிரியா பூஜை அனைத்தும் கடந்து நின்ற நிலையிலும், அவர் அதிகார பேதத்தை உணர்ந்து இருந்தார். முற்றிலும் பக்குவம் உற்ற தம் சீடர்கட்கும் கர்மானுஷ்டானங்கள் தேவையில்லை என்று பகர்ந்தார் பகவான். ஒருநாள் காலை சிற்றுண்டியின் வேலையில் ராமனாத பிரம்மச்சாரி எதுவும் சாப்பிடாமல் உட்கார்ந்ததைக் கண்டு "ராமனாதா! ஏன் சாப்பிடவில்லை?" என்று கேட்டார் பகவான். அவர் 'இன்று என் அம்மா சிரார்த்தம். அதனால் நான் சாப்பிடவில்லை' என்றார். உடனே பகவான், "அப்படியா! ராமனாதன் முன் இலைபோட்டு, இரண்டு இட்லிகள் அதிகமாகப் பரிமாறுங்கள்!" என்றார். பகவானிடம் பூரண சரணாகதி செய்து முழுதும் பக்குவம் அடைந்த சாதகர்க்கு அனுஷ்டானம் ஏதும் தேவையில்லை என்பது பகவானால் விளக்கப்படுகிறது.

அதேசமயம், உள்ளத்துள்ளே பக்குவம் அடையாமல் வெளியே ஞானம் பெற்றவர்போல் கற்பனை செய்பவர்களை பகவான் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பக்குவம் அடையும்வரை அனுஷ்டானங்களைப் பின்பற்ற வேண்டும் என்று வழிகாட்டுகிறார்.

ஆசிரமத்தில் தங்கியிருந்த ராஜகோபாலன் என்பார் பகவான் ராமனாத பிரம்மச்சாரிக்குக் கூறியதைக் கேட்டு தானும் தன் அன்னையின் சிரார்த்தத்தின்போது, கர்மானுஷ்டானங்கள் எதுவும் செய்யாமல் உணவுக்கூடம் வந்து அமர்ந்தார். அவரிடம் பகவான் "இன்று உங்கள் அன்னையின் திதி அல்லவா! நீங்கள் அனுஷ்டானம் செய்யவில்லையா?" என்று கேட்டு அவரை அனுப்பிவிட்டார். அன்பர் ஒருவர், 'ராமனாத பிரம்மசாரி சிரார்த்த திதி அனுஷ்டானம் செய்யத் தேவையில்லை என்று கூறிய நீங்களே, இன்று இவரை அனுஷ்டானம் செய்யக் கூறி அனுப்பி விட்டீர்களே!'

என்று வினவியபோது, "ராமனாதன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு குருவே சரணம் என்று ஸர்வ பரித்தியாகத்துடன் வந்தவன். ராஜகோபாலன் எதை விட்டார்?" என்று கூறினார்.

பகவான் சம்பிரதாயமான கருத்துக்களை மட்டும் கூறுபவர் அல்லர். அவர் உபதேசங்கள் விஞ்ஞான பூர்வமானவை. ஆசை துன்பத்தினை விளைவிக்கும். எனவே ஆசையை அடக்கு என்று புத்தர் போன்ற ஞானிகள் உபதேசித்தனர். பகவான், ஆசையை அடக்கு என்று மட்டும் கூறாமல், "ஆசை எவனுக்கு எழுகிறது என்பதை ஆத்மவிசாரம் மூலம் விசாரித்து அறிவாயாக! அப்போது அகந்தை எழுவதாலேயே ஆசைகள் எழுகின்றன என்பதை அறிவாயாக. அகந்தையின் மூலத்தை நாடி, அதை அறியும்போது அகந்தை ஆத்மாவில் ஒடுங்குகின்றது. அத்துடன் ஆசைகளும் அழிகின்றன" என்கிறார்.

"நான் ஆசை கொண்டு இருக்கிறேன்" என்று எண்ணும்போதே என்னையும் என் எண்ணத்தையும் பிரிக்கும் துவந்துவநிலை - இருமை நிலை - தோன்றுகிறது. இந்த இரட்டை உணர்வு, மருளில் கொண்டு சேர்க்கும். ஆசைப்படும் பொருளும் ஆசைப்படுவோனும் இரண்டும் வேறல்ல. இரண்டும் ஒன்றே; என்று ஆராய்ந்து அறியும்போது அங்கே தெளிவு பிறக்கும். காண்பான், காண்பொருள் என்ற இருமைநிலை அகந்தை எழுவதாலேயே எழுகிறது. பூரண அமைதியான, மனம் அசைவற்ற நிலையில், அகந்தை ஆத்மாவில் ஒடுங்குகிறது. அகந்தை வெளிப்புற வீழலாகி, இதுவரை இருந்துவந்த ஆசைப்பொருள் அனைத்தும் மறைகின்றன.

இத்தகைய ஆன்மவிசாரணை உனக்குக் கடினமாகக் தோன்றுகின்றதா? பரவாயில்லை. நீ செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்தால்,

ஆசையினால் தூண்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட செயல்கள்கூட அவற்றின் போக்கில் மனதின் பரிணாமத்திற்கு வழிவகுக்கும் என்கிறார் பகவான்.

*கருத்தனுக்கு ஆக்கும் நிட்காமிய கர்மம்*
*கருத்தைத் திருத்தியது அஃது உந்நீபற*
*கதிவழி காண்பிக்கும் உந்தீபற*

செய்யும் கருமத்தின் பலனில் இச்சை விடுத்து, அதை இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்யும்போது, அந்த நிஷ்காம்ய கர்மம் மனதில் உள்ள வாசனைகளையும் அழுக்கையும் நீக்கி, சித்தசுத்தி கொடுக்கிறது. தூய்மையான மனதில் ஆசைகள் ஒட்டுவதில்லை. தூய மனம் ஆத்ம சாட்சாத்காரத்திற்கு நேர்வழியை உணர்ந்து, பின்பற்றுகிறது.

*அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்*
*அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை*
*அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு*
*அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே!*

*(தந்திரம் 9, ஞானோதயம்; திருமந்திரம்-2820)*

'ஐம்புலன்களைப் போரிட்டு அடக்கு' என்று அறிவுரை பகர்வர் சிலர். தவம், யாகம் பலசெய்து புலனடக்கி வெற்றி பெற்ற தேவர்கள்கூட ஆசைவயப்பட்டு மீண்டும் பிறக்கின்றனர். வலிந்து புலன் அடக்க முயன்றால் உணர்ச்சி நீங்கிய ஜடம் ஆகலாம். உண்மையான ஞானவழி ஏதெனில், விசாரம் செய்முறைகளை புலன்களைப் பதங்கம் அடையச் செய்வதே.

முதலில் அவாவினால் தூண்டப்பட்டு, கர்மங்களில் ஈடுபட்டாலும், இறைவன் அருளை நாடி அந்தக் கர்மபலனை இறைவனுக்கே அர்ப்பணித்தால் வைராக்யம் பிறந்து மனம் திடமாகிறது. திடம் பெற்று மனமானது புலன்கள் காட்டும் ஆசைவழியே வெளியே ஓடாமல் தன்னிலையில் தானே நிலைபெறுகிறது. 'அவா

*அறுத்தல்' என்னும் இதனைப் பின்பற்றும்போது அது படிப்படியாக சாதகனை இறைநிலைக்கு அழைத்துச் செல்கிறது.*

*ஆரம்பநிலையில் மனமயக்கத்தினால் உலகப் பொருட்கள் மீது நான் கொண்டிருந்த வெளித்தனமான ஆசையில் இருந்து விடுபடும் குறிக்கோளுடன் "சச்சிதானந்தமான உன்னை அடையவேண்டும் என்ற ஆசையை எனக்கு உண்டாக்கினாய். உலக ஆசை என்னிடமிருந்து போகவேண்டும் என்பதற்காக நீ என்னை உன்மீது பித்தாக்கி வைத்தாய். உன் அருட் பிரவாகத்தின் மீது நான் கொண்ட இந்த ஆசையும் போய், உண்மை ஸ்வரூபத்தை நான் அறிந்து உன்னுடன் ஒன்றுவதற்கான மருந்தையும் நீயே அருள்வாய்" என்கிறார் பகவான்.*

*பித்துவிட்டு உனைநேர் பித்தனாக்கினை அருள்*
*பித்தம் தெளிமருந்து அருணாசலா (மணமாலை 66)*

*இதே கருத்தை மீண்டும் 86ஆவது பாடலில் கூறுகிறார்:*

*மோகம் தவிர்த்து உன்மோகமா வைத்தும்என்*
*மோகம் தீராய்என் அருணாசலா!*

*இங்ஙனம் பக்தி யோகத்தின் சிறப்பைக் கூறும் பகவான் ஆசைகளை அகற்றும் மற்றொரு வழி இடையறாத தியானம் என்பதை 'உள்ளது நாற்பது அனுபந்தம்' 25ஆவது பாடலில் குறிப்பிடுகின்றார்.*

*அகில உபாதி அகன்ற அறிவுஎது?*
*அகம் அச்சிவம் என்று அனிசம் - அகத்தே*
*அகலாத் தியானம் அதனால் அகத்தின்*
*அகில ஆசத்தி அகற்று.*

*அனைத்துக் கற்பனைத் தோற்றங்களும் நீங்கி, சுயமாக ஒளிரும் அறிவானது எதுவோ, அந்த அறிவாகிய சிவத்தை 'அந்தச் சிவமே நான்!' 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்று எப்போதும் இடையறாமல் உள்ளத்தே சற்றும்*

*மாறாத தியானத்தினால் உலகத்தின் ஆசாபாசம் முதலிய எல்லாப் பற்றுக்களையும் அகற்றி விடுவாயாக என்பது பகவான் உபதேசம். மேலே விரிக்கப்பட்ட பாய்மரம் எப்படிக் காற்றினால் அலைக்கழிக்கப் படுகின்றதோ அதேபோல் மனம் வெளிமுகமாகும்போது பல்வேறு தோற்றங்களாலும், விருப்பு-வெறுப்புக்களாலும் அலைக்கழிக்கப் படுகின்றது. ஆழ்கடலில் இடப்பட்டுள்ள நங்கூரம் கப்பலை நிலைநிறுத்தி விடுவதுபோல், மனம் இதயத்துள் ஆழ்ந்து தியானத்தில் நிலைபெறுமாயின் மனம் தூய்மை பெற்று, இறைவனிடம் நிலைபெறுகிறது.*

*இறைவனை அடையவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், உலக சுகமே போதும் என்று எண்ணி, அதனையே தேடுவோன் அனந்தம் அடைவானா என்ற கேள்விக்கு, அத்தகையோன் இகலோக சுகத்தைக்கூட அடைய மாட்டான் என்று பகவான் பகவத்கீதா சாரம் 14ஆவது பாடலில் அறுதி இடுகிறார்.*

*எவன்நூல் விதியைஇகந்து இச்சை ஏவும்*
*அவவழி தன்னை அடுப்பான் - அவன்என்றும்*
*சாரானே சித்தியொடு சாந்தி சுகத்தினையும்*
*சேரானே முக்திச் சிறப்பு.*

*இது ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாகும் பாடல். இதில் எவன் ஒருவன் அறநூல்கள் விதித்த வழியில் நடப்பதைத் தவிர்த்து ஆசையால் தூண்டப்பட்டு மனம் போனபோக்கில் தகாத வழியில் நடப்பானோ அவன் ஒருநாளும் புருஷார்த்தமாகிய சாந்தி, முக்தி மட்டுமின்றி இகலோக சுகத்தையோகூட அடைய மாட்டான் என்கிறார் பகவான்.*

*கீதையின் பிரசித்திபெற்ற ஸ்லோகம், கீதை 2-62இல், “த்$^4$யாயதோ விஷயான் பும்ஸ:” என்று தொடங்கும் ஸ்லோகம் எங்ஙனம் ஜீவனின் வீழ்ச்சி சம்பவிக்கிறது என்பதை விளக்குகிறது. விஷயப் பொருட்களையே*

எண்ணிக் கொண்டிருப்பவனுக்கு அவற்றிடம் பற்று உண்டாகிறது. பற்றிலிருந்து ஆசையும், ஆசையிலிருந்து கோபமும், கோபத்திலிருந்து பெருமோஹமும், மோஹத்திலிருந்து தான் உண்மையில் யார் என்னும் எண்ணம் நழுவி மறதி உண்டாகிறது. மறதியிலிருந்து நாசமும், புத்தி நாசத்தில் இருந்து, பேரழிவு உண்டாகிறது என்று கண்ணபிரான் விளக்குகிறார்.

இதே கருத்தை பகவான் ஆன்ம சாட்சாத்காரம் 33ஆவது பாடலில் தெளிவுற விளக்குகிறார்.

**வினைகள் எல்லாமுமே விட்டு நிராசை**
**தளையுற்றச் சங்கம் தணந்து - பினைஎன்றும்**
**தன்னிலே தன்னாலே தன்னிலமர் தன்னையே**
**உன்னிடவேண்டும் உணர்.**

வினைகள் எனப்படும் சகல கர்மங்களையும் முற்றிலும் நீக்குக. ஆசைகள் அனைத்தையும் ஒழித்து விடு. மக்கள் கூட்டத்தில் இருந்து விலகி, விடுபட்டு நில். பிறகு எப்பொழுதும் தன்னிடத்தே உள்ள தன்னையே, தனக்குள் ஏகாந்தமாய் அமர்ந்து தன்னைக் கருவியாக்கித் தியானிப்பாய் என்கிற பகவானின் வழிகாட்டுகிறார்.

ஆஸ்ரமத்துக்கு வந்திருந்த எஸ். தயாள் என்ற சாதகர், 'நான் இருபது ஆண்டுகளாக சாதனை செய்து வருகிறேன். நான் மேலும் முன்னேற என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார். “என்னால் ஆத்மாவின்மேல் என் மனத்தைப் பதித்து 3, 4 நிமிடங்களுக்குமேல் தியானம் செய்ய இயலவில்லை. மனம் வெளி விஷயங்களின் மீது தாவிச் செல்லும் இயல்பு உடையதாய் உள்ளது' என்றார் அவர்.

அவருக்கு பகவான் கூறினார்:

“உங்கட்கு ஆன்மா ('நான்' என்ற உணர்வு) மீது மனத்தை நிறுத்துவது கடினமாக உள்ளது. மனம்

வெளிப்பொருட்கள் மீது தாவித்தாவிச் சென்று, அலைவதைப் படிப்படியாகக் குறைத்தால் சாதனையில் வெற்றி பெறமுடியும். மனம் ஏன் வெளிவிஷயங்களை எண்ணி அலைகின்றது! அவை நம்மைக் கவர்ந்து இழுப்பதால். அவற்றை நமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கவர்ச்சியைக் குறைக்கப் பழகிவிட்டால் மனம் வெளியே சென்று அலையும் நிலைமாறி, உள்ளே நோக்கத் தலைப்படும். ஆன்ம நாட்டத்தின் சுவையை உணர்த் தொடங்கிவிட்டால், பிறகு வெளி விஷயக் கவர்ச்சி குறையத் தொடங்கும்."

'வெளிப்பொருட்கள் மீது மனம் ஏன் ஈடுபட்டுச் செல்கிறது? தியானம் கைகூட இதுவே தடையாக உள்ளதே!' என்று அவர் மேலும் வினவினார்.

பகவான், "இது மனதின் இயல்பு" என்று குறிப்பிட்டு "மனம் தனக்கு எது மகிழ்ச்சி கொடுக்குமோ அதையே ஆவலுடன் பின்பற்றிச் செல்லும். வெளிவிஷயங்களின்மேல் பற்றைக் குறைத்துக் கொள்ளப் பழகிய மனம், அவற்றைப் பின்பற்றாது, ஆன்மாவையே பற்றிக்கொண்டு நிற்கும். புலன்களின் இயல்பாகிய விஷயங்களில்தான் இன்பம் உள்ளது என்று நினைக்கின்ற வரையில் மனம் அவற்றையே நாடிச்செல்வது இயற்கையே. அவற்றில் நிலையான இன்பம் இல்லை என்பதை உணர்ந்தால், மனம் வெளியே திரிவதைக் குறைத்துக்கொண்டு உள்ளே நோக்கத் தொடங்கும்" என்றார்.

'வாசுதேவ மனனம்' என்ற நூலைப் பயின்று வந்த சூரிநாகம்மா பகவானிடம் 'இறைவனை நேரில் கண்டுவிட்டால் பற்றின்மை, அவா அறுத்தல் போன்றவை இல்லாமலேயே ஒருவித முக்தி அடைந்து விடலாம் என்று இதில் கூறப்பட்டுள்ளதே! இது எப்படி? முக்தி பெற பற்றின்மை என்ற நிலை உறுதிப்படவேண்டாமா?' என்று கேட்டார்.

பகவான் இதற்குத் தன் வாழ்க்கையில் ஆண்டவனை உணர்ந்தவன் ஜீவன்முக்தன் எனப்படுவான். அவனுக்கு ஓர் சில பற்றுகள் இருக்கலாம். (சில ஞானிகள் இனிப்புகளை விரும்புவதையும், சில ஞானிகள் புகைப்பதையும் கண்டுள்ளோம்). அவை அவனது உடலைப் பற்றியது. ஆத்மாவைப் பற்றியதாக இருக்கமுடியாது. ஜீவன்முக்தனின் இந்தப் பற்று புறத்தே உள்ளது. அகத்தை அது பாதிக்காது. அப்படி இருந்தும், சிலசமயம் அவனது முழு ஆனந்த அனுபவத்துக்கு சிறிது தடையாகவே இருக்கும். முந்திய வினைப்பயனால் இது ஏற்படுகிறது. அது அனுபவித்துத் தீர்ந்தவுடன் அவன் பூர்ண சாட்சாத்காரம் பெறுகிறான்" என்று பதில் அளித்தார்.

குரு அருளை அன்றி நமக்கு ஞானம் வருவது மிகக் கடினம். குருவினைப் பற்றிய தியானத்திலேயே ஈடுபட்டு இருக்க வேண்டும். அப்போது அஞ்ஞான அந்தகாரம் விலகி, நமக்குள்ளேயே உள்ளே பரம்பொருளை உணரலாம். 'வாகீச கலாநிதி' கூறும் எடுத்துக்காட்டு இதுவே. ஒருவன் நட்ட நிசிவேளையில் ஓர் ஊருக்குச் செல்கிறான். எங்கும் ஒரே கும்மிருட்டு. எது, எவ்விடம், என்ன பொருள் என்று ஒன்றுமே தெரியவில்லை. இரவு கழியட்டும் என்று பேசாமல் ஒரு இடத்தில் படுத்துக் கொள்கிறான்.

காலை ஆறு மணி. எழுந்து பார்க்கிறான். ஒளிப்பிழம்பாகச் சூரியன் கீழ்த்திசையில் உதிக்கிறான். எதிரே உள்ள பொருட்கள் எல்லாம் தெரிகின்றன. அவனுக்கு மிக அருகிலேயே ஒரு பெரிய மலை இருப்பதைக் காண்கிறான். முன்னாள் நடுநிசியில் அவனுக்கு அந்த மிக உயர்ந்த மலை தெரியவில்லை. ஆனால் காலையில் சூரிய ஒளி பரவிய மாத்திரத்தில் பொருள்கள் யாவும் இயற்கை உருவத்தோடு தோன்றுகின்றன. பல வண்ண மலர்கள், பள்ளமான

குளங்கள், உயர்ந்த மலை அனைத்தையும் பார்க்கிறான். இரவில் தான் படுத்து உறங்கிய இடத்தையும் பார்க்கிறான். அது ஒரு குட்டிச் சுவரின் அருகில் உள்ள அழுக்கான இடம். முன்னாள் கரிய இருள் அந்த உயரிய மலை, அழுக்கான இடம், குட்டிச் சுவர் அனைத்தையுமே மறைத்து இருந்தது.

புதிதாகவா அந்த மலை தோன்றியது? முன்பே இருந்த அந்த உயர்மலையை இருள் மறைத்து இருந்தது. ஒளி வந்தவுடனே அந்த மலை அவன் கண்முன்னே தோன்றியது. ஒளியின் துணைகொண்டு அவன் மேலே ஏறுகிறான். உயரம் செல்லச்செல்ல அவன் பார்வை விரிவடைகிறது. அவன் கண்கள் விரியவில்லை. பார்வைப் பொருட்கள் விரிந்தன. அதாவது அவன் மேலே செல்லச்செல்ல பரந்த பார்வையை ஒடுக்குகின்ற தடைகள் கீழே போய்விட்டன. மலையின் சிகரத்துக்குச் சென்றவன் சந்தனமரக்கிளையில் கட்டிய தேன் அடையில் இருந்து தேனை அவன் உண்கிறான்.

இந்தத் தேன் அனுபவத்தையே அருணகிரி அலங்காரத்தில் விளக்குகிறார்.

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம் ஆறுடைத் தேசிகனே!

பொருள்: "அருள் என்னும் ஒளியில் தோன்றிய உயர்ந்த ஞானமாகிற மலையின் உச்சியில் அன்பில் விளைந்ததாகிய ஒப்பற்ற தேனை, காலவரை அற்ற அநாதியில், எல்லையற்ற வெளியில் பெற்ற வெறும் சூன்யத்தைப் பெற்ற ஒப்புயர்வற்ற தனியான அனுபவ நிலையை நான் அனுபவத்தால் உணரும்படி எனது குருநாதனாம் குஹன் உபதேசித்தான்" என்கிறார் அருணகிரியார்.

இந்தப் பாடலின் ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்து அனுபவிக்கக் கூடியது.


'பூதரம்' என்றால் மலை. இறைவன் அருணாசலன் அருளால் தோன்றிய ஒளியில் விளைந்தது மாபெரும் ஞானமலையாம் அண்ணாமலை. இறைவன் அருள் ஒளியில் தோன்றிய ஞானமலையான அருணகிரியை பகவான் கண்டார் அல்லவா? அந்த ஞானமலையில் ஏறும்போது விரிந்த பிரபஞ்சப் பார்வைக்குத் தடையாய் இருந்த விஷய வஸ்துக்கள் அனைத்தும் கீழே போய்விட்டன. அந்த ஞானமலையில் சிகரத்தில், அவர் கொண்ட பேரன்பினால் ஆத்மஞானம் என்னும் தெவிட்டாத தேன் கிடைத்தது (அளி=தேன்). அறிவு செயல்படாத இடத்திலும் அன்பும் அருளும் செயல்படும் அருணகிரி ஒளி என்கிறார். மலை என்கிறார், ஆனந்தமாகிய தேன் என்கிறார். இவை அனைத்துமே பௌதிகப் பொருட்கள் அல்ல. அவை நமக்கு அகக்கண் திறக்காவிடில் தோன்றா.

'கண்ணதுதான் அந்தமில்லாக் கண்' என்று பகவான் குறிப்பிடும் அகக்கண் திறக்கவேண்டும். பௌதிகமாகத் தோன்றாத பொருளை விளக்குவதற்காக உருவகப்படுத்தி ஞானி கூறுகிறார்.

அநாதியிலே=தொடக்கமும் முடிவும் அற்ற ஆனந்தம் அது

வெளியில் விளைந்த=எல்லையற்ற தஹராகாஸத்தில் இதய வெளியில் விளைந்தது இந்த ஆனந்தத் தேன்

வெறும்பாழ்=தனியாக இருப்பது என்றால் தன் இனம் சார்ந்த பொருள் வேறு ஒன்று அங்கே இல்லை என்பதாம். மல்லிகைக் கொடியில் ஒரே ஒரு பூ மட்டும் இருந்தால், அங்குப் பல இலைகள், கொடிகள் இருந்தாலும், வேறு பூக்கள் இல்லாமையால் அது தனிப்பூ.



தன் இனப்பொருளும் இல்லை, வேறு இனப் பொருளும் இல்லை என்பதையே வெறும் 'தனி' என்ற சொல் குறிக்கிறது. இத்தகைய கால, இடம், இனம் கடந்த பொருளை நாம் அறிவினால் அறிய முடியாது. அனுபவத்தினால் மட்டுமே அறிய முடியும்.

பகவானும் மணமாலையில் இக்கருத்தினை, "ராப்பகல் இல்லா வெறு வெளிவீடு (91) என்றும் "வெட்டவெளியில் நீ நட்டமாடினை (85) என்றும், வெளி வெறும் பாழ் என்ற நிலையைக் குறிப்பிடுகிறார். ஆன்ம சாட்சாத்கரணம் 27ஆவது பாடலில் இதே கருத்தை பகவான் கூறுகிறார்.

நமது தேசிகன் – வழிகாட்டி – அருளால் நான் அருள் ஒளிபெற்று காலதேச எல்லை கடந்த ஒன்றை அன்பில் விளைந்த சச்சிதானந்தத் தேனை நான் பெறும்படி அவன் உபதேசித்தான் என்கிறார் அடியார்.

மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# உதாரண புருஷராம் உத்தமர் அண்ணா

*ராம்மோஹறன்*

*இதயமுழுதும் இனிமையுற்றிடும் இன்முகத்தினன்*
*இறையருள்*
*வதியவே குருமொழியினைத் தன் எழில் எழுத்தில்*
*வரைபவன்!*
*துதிகொள் பகவான்தன் தூய்மையே*
*அவர் சீர்முகத்தினில் ஒளிதரும்*
*கதியுமாகி நம்மைக் காக்க வந்தகுரு*
*சேவகன் தனை நாம் பணிவோம்!*

*பொருள் ஈட்டும் நோக்கம்தான் இல்லை; மற்றும்*
*புகழீட்டும் நோக்கம்தான் சிறிதும் இல்லை;*
*மருள் போக்கும் பகவன் வாக்கின் சீர்மை*
*மாநிலத்தார் அறியவைக்கும் நோக்கம் ஒன்றே*
*ஒருநோக்காய் உழைக்கின்ற உயர் பண்பாளர்.*
*அளப்பரிய அன்புடையார், அறிவின் மிக்கார்.*
*திருநிறையும் மனத்தார் நம் அண்ணா ரமண*
*சுந்தரம் தன் நாமம்தான் என்றும் வாழ்க!*

*சத்தியத்தின் ஒளியுடனே கண்கள் தம்மில்*
*சாந்தத்தின் ஒளியும் சேரும் தூய பார்வை!*
*நித்தியமாம் பகவான் தன்னில் நிலைத்தே நிற்கும்*
*நிர்மலமாம் உள்ளத்தே பொங்கும் அன்பு*
*இத்தரையில் அணுகும் அன்பர்கட் கெல்லாம்*
*இயல்பாக இறையருளை விளக்கும் சால்பு*
*இத்தனையும் ஒருசேர எண்ணிப் பார்த்தால்*
*எம் சுந்தரரமணன் தன் வடிவம் தோன்றும்!*

*வெளிஒளியில் விளங்குகின்ற ரமண யோகம்*
*தன்மனத்தே பதித்திட்ட செம்மை யாளன்*
*தெளிவுடனே பகவானின் பனுவல் எல்லாம்*
*சிறப்புடனே பயின்றிட்ட தன்மையாளன்*
*களிப்புடனே தன்னை நாடி வருவோர்க்கெல்லாம்*
*தானே உவந்துதவும் அன்பு மித்ரன்*
*ஒளிகதிராய் உலகமெல்லாம் விளங்கிடும் நம்*
*குரு ரமணர் சீர்தன்னை உள்ளம் வைத்தோன்*

*வேண்டறிய அன்புபொங்கும் இதயம் உள்ளார்*
*வித்தாக இறையருளை விதைக்கும் நோக்கார்*
*ஆண்டுபல ஆயினும் அயர்வு கொள்ளா*
*தருஞ்சேவை புரிந்த ஆன்ம வித்து*
*ஆண்டவனின் சேவைக்காய் தன்னைத் தந்து*
*அவனியிலே எல்லார்க்கும் அன்பு தந்து*
*'மீண்டும் வருக'வென்று அன்பர் கூட்டம்*
*தனை அழைக்கும் தகைமையாம் அண்ணா வாழி!*

*வெள்ளம்போல் அணைக்கின்ற அன்பினோடு*
*விரிபரிதியாக தன்னல இருளைப் போக்கி*
*உள்ளதனை உள்ளபடி உணர்ந்து வந்து*
*உலகினில் வாழ் மக்களெல்லாம் உணரச் சொன்னார்*
*தெள்ளிய சீர் மனத்துடையார், சேவைச் செல்வர்*
*தெரிகின்ற இடமெல்லாம் அவர்தம் சேவை!*
*கள்ளமில்லா புன்சிரிப்பால் கவர்ந்த அண்ணா*
*கவின் சுந்தரரமணன் தாள் என்றும் வாழி!*

*கார்முகில் போல் பாகசாலையில்*
*தான் உணவளித்திடும் தாயவர்*
*பார்முழுதிலும் ரமணபாதை வரு*
*மையங்கட் குயிரனவனர்*
*ஆழ்கடல்போல் ஆன்மசாந்தியில்*



*அனுதினம் அவர் ஆழ்ந்தவர்*
*தாழ்விலாது குருவாசகம் பல*
*தான்பதிப்பித்த தாபதர்!*

*சம்பந்தம் இலாதார்க்கும் உதவி ஈந்து*
*சகல சுகம் தனைவிடுத்து, தவமாய் வாழ்ந்து*
*உம்பர் இசைபோல தினம் பாராயணத்தில்*
*ஏற்றமிகு இடம் சேர்ந்து காலைமாலை*
*செம்பொருளாய்த் திகழ்கின்ற தெளிவுப் பாக்கள்*
*தேன்பிலிற்றும் பனுவல்கள் பாடி வந்தார்*
*ஒண்பயிர்க்கும் பருவமழை ஆகும் எங்கள்*
*உயர் சுந்தரரமணன் அண்ணா என்றும் வாழி!!*

# ரமணாயனம்

**க்ரேஸி மோஹறன்** **விளக்கம்: கௌதமன்**

## முக்தி காண்டம் (தொடர்ச்சி)

*கலையாத அல்லி மலரதன் மொக்காய்*
*வலமார் பிலிருவிரல் விட்டு இலகும்*
*இதயத் துளையில் இருளும் ஒளியும்*
*உதயமாம் உண்மை உணர்....(381)*

*மஹாநாராயண உபநிஷதத்தில் பரமாத்மா தலை கவிழ்ந்த மலர் மொட்டின் மத்தியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று பகவான் ஆத்மாவின் இருப்பிடத்தை உருவகமாய் வலமார்பின் மத்தியிலிருந்து இரண்டு விரல்கடை தொலைவில் இதயாகாசத்தில் பரமாத்மா இருளும்; ஒளியும் கடந்த நிலையில் பிரம்ம வித்துக்கு உதிப்பதாகக் கூறுகிறார்.*

*உணரும் ஒளியை உலகியல் நாட்டம்*
*புணர இருளாம் பிறப்பு திணரும்*
*திருட்டுமனக் கையில் திணித்திடு ''நானார்''*
*திறக்குமது ஆன்மாவின் தாழ்....(382)*

*ஒளி உருவாய்த் தோன்றி உடலுடன் பிறந்த ஆன்மா, உலக வாசனைகள் புணரும்போது பிறப்பு-இறப்பு என்னும் அறியாமை இருளில் சிக்கிக் கொள்கிறது. வழி தெரியாமல் திணறுகின்ற மனத்துக்கு வழிகாட்ட பகவானின் 'நானார்' என்னும் விசாரத்தைப் பற்றிக் கொள்ளச் சொல்வாய்.*

*தாழுடைத்த கள்ளன் திரைகடல் ஆன்மாவில்*
*மூழ்கடித்துப் போதல் மனோநாசம் பாழுடல்*
*பற்றின்றி வெற்றியாய் பேரின்ப சாம்ராஜ்ய*
*கொற்றவனாய் இவ்வுலகில் சுற்று....(383)*

*கள்ள மனமானது எல்லையற்ற ஆத்மஞானக் கடலில் நானார் விசாரத்தால் கரைந்து போதல் மனோநாசமாகும்.*

*நாசமடைந்த மனம் மீண்டும் எழாது. அப்போது நம்மைப் பீடித்த பற்றுகள் அனைத்தும் நீங்கி பேரின்ப ராஜ்யத்தின் அரசனாய் நாம் ஜனகன் போன்று உலகில் வாழலாம்.*

***பெருநகர தம்பதியர் பேரார்வம் கொண்டு***
***பெருமகன் ஏசு பிரானின் மறுபிறப்பாய்***
***எண்ணி வணங்கிட அண்ணலும் அற்புதமாய்***
***சொன்னது கேட்டு சிலிர்ப்பு....(384)***

*தன்னை இயேசுபிரானின் அவதாரமாகவே எண்ணி வணங்கிய கிறிஸ்துவ தம்பதியர்க்கு இயேசுபிரானின் சிலுவை ஏற்றத்தின் உட்பொருளை பகவான் விளக்கக் கண்டு அவர்கள் மெய்சிலிர்த்தனர்.*

***உங்கள் பெருநகர உப்புநீர் முற்புறத்தில்***
***திங்கல் சலவைத் திடலுண்டு அங்கங்கு***
***தென்னை மரங்களும் திண்ணைகளும் உண்டைந்தாம்***
***எண்ணில் அமர்வீர் என்று....(385)***

*நகர வர்ணணை*

***காலதேச வர்த்தமானக் கோலங்கள் தாண்டிய***
***மூலமாம் ஆன்ம முனைப்புடையோன் ஞாலத்தை***
***கண்டிடுவான் கையளவில், எண்டிசையும் அண்டமும்***
***உண்டில்லை ஆவதவன் உள்....(386)***

*இடம், காலம், நிகழ்வு அனைத்தையும் கடந்த மூலப் பொருளாம் ஆன்மாவிலே சதா நிலைத்திருக்கும் முனைப்பினை உடையவன், அண்ட சராசரத்தையும் தன் கையளவிலே காணும் ஆன்ம சக்தி உடையவன் பகவான். அவனது இதய ஆகாசத்தில் அனைத்து அண்டங்களையும் ஆக்கி, நிலைநிறுத்தி, அழிப்பவன் அவன்.*

***கொண்டுசென்ற வாழையில் விண்டு வினாயகர்க்கு***
***துண்டுகூட வைக்காது தந்தவரை கண்டித்தார்***
***செம்மலை நீங்காது சுற்றுப் புறமறியும்***
***செம்மலை யாரறிவார் சொல்....(387)***

*செம்மல்= உயர்ந்தோனாகிய பகவான்*

*செம்மலை=அருணாசலம்*

நைவேத்யம் என்று எடுத்துச்சென்று, கடவுளுக்குக் காட்டிவிட்டு, பிறர்க்கும் தராது, தானே அனைத்தையும் உண்டவனைக் கண்டித்தல்.

*சந்யாசம் வேண்டி சலித்துவந்த அன்பர்க்கு*
*உன்ந்யாயம் உத்தமமா உன்னிப்பார் அந்யாயம்*
*தைக்க அரும்பாடு தையலிலை போல்வாழ்வு*
*துய்க்கும்முன் தள்ளல் திமிர்....(388)*

சந்நியாசம் அளிக்க வேண்டித் தன்னை அண்டிய சாதகர்க்கு இந்த வாழ்வு கஷ்டப்பட்டு தைக்கப்பட்ட இலை போன்று பல்வேறு ஆசைகளாலும், கர்மங்களாலும் உருவாக்கப்பட்டது. இறுதியில் அதனைத் தூக்கி எறிவது போல் ஆணவத்தையும் எறிதலே உண்மையான சந்யாசம் என்றார் பகவான்.

*எம்பிரான் கேட்டார் எழுதிட நோட்புக்கை*
*நம்பியார் சொப்பனத்தில் நைச்சியமாய் அன்பரதை*
*மாதவம் முன்வைக்க “மாதவா நீமறந்த*
*போதிலும் வந்ததுபார் புக்”....(389)*

மாதவ ஸ்வாமியிடம் கேட்ட நோட்டுபுத்தகத்தை அவர் கொணர மறுக்க, நம்பியார் கனவில் வந்து கூறி, அதைப் பகவான் பெற்ற நிகழ்ச்சி.

*ராஜகோபால் பேரனை நாகராஜன் தீண்டிட*
*மேஜைமேல் வைத்திறைஞ்சி வேண்டினார் ராஜ*
*சிகிச்சையாய் சேயைத்தன் சொர்ணக்கை யால்வருட*
*மகிழ்ச்சியாய் பாலன் முழிப்பு....(390)*

ராஜகோபாலன் பேரனைப் பாம்பு கடிக்க, அச்சிறுவனை பகவான் தன் அருளால் மீட்ட நிகழ்வு.

*அற்புதம் கண்டோர் அதிசயிக்க அண்ணலோ*
*அற்பமாய் சொல்வாராம் “அப்படியா!” நற்கதி*
*நானாக செய்ததில்லை தானாக நேர்ந்திடும்*
*சோணேசன் கையில்நாம் சொப்பு....(391)*

*அதைக் கண்டு வியந்த அன்பர்களிடம், "இது நான் செய்த அற்புதமல்ல. இது அருணாசலனின் அருள்" என்றார் பகவான்.*

*தொண்டர் மயக்கத்தால் உண்டு களைத்தவர்*
*விண்டார் இனிவுப வாசமென்று அண்டும்*
*அடியார்கள் அன்புப் பிடிவாதம் தப்ப*
*வடிவான வெற்பை வலம்....(392)*
*வலம்வரும் வேளை வனிதையர் ஏழ்வர்*
*பலமாய் படையல் படைக்க சிலையாய்*
*சமைந்தவர் அன்பாய் சமைத்ததை உண்டு*
*சுமந்தார் உபவாசச் சோறு....(393)*
*சோறன்று போட்டது யாரென்று கேட்டதற்கு*
*ஊரொன்றி வாழ்ந்திடும் சப்தகன்னி மாரென்று*
*சோதித்தவர் சொன்னார் சமையலுக்கு வேண்டிய*
*ஏதுமின்றி வந்தனரவ் வேழு....(394)*

*இடைவிடாது அன்பர் பிரசாதம் கொண்டுவந்து உபசரிக்க, இதுவே ஒரு பந்தமாயிற்று. இனி உணவை நாடக்கூடாது என்று ஆசிரமத்தை விட்டு நீங்கி, தனியாக கிரிவலம் வந்தார். அப்போது எதிரே ஏழு கானகக் கன்னியர் வந்து அன்புடன் அமுது படைக்க, அதை மறுக்கக்கூடாது என்று உண்டார். யார் உணவு படைத்தவர் என்பதைத் தன் ஆத்ம சக்தியால் உணர்ந்த பகவான், "இது சப்த கன்னியர் எனப்படும் ஏழு தேவ கன்னியரே வந்து எனது சங்கல்பத்தை முறியடிக்கத் தந்த உணவு" என்றார்.*

*இந்து கிருத்துவம் இஸ்லாம் இவைமூன்றும்*
*அந்த பரத்திற்(கு) அணுகுமுறை சொந்த*
*முயற்சியே மெய்யுணர்வில் மொய்த்திட சாதனம்*
*பயிற்சியாய்த் தேடல் பழகு....(395)*
*எந்தவழி போனாலும் ஏகம்தான் மிஞ்சிடும்*
*உந்துகின்ற உத்தமரை உன்மார்க்க பந்துவாய்*
*ஏற்கத் தடையில்லை, என்பதனால் இங்குபல*
*தீர்க தரிசிகள் பார்....(396)*

*பல்வேறு தீர்க்கதரிசிகள் அவதரித்து, எந்த வழியில் போனாலும் அந்த ஒரே பிரம்மத்தையே அடைவாய் என்று வழிகாட்டி உள்ளனர். உனது சுயமுயற்சியால் ஆத்ம சாதனத்தை அப்யாசம் செய்து பரத்தில் ஒன்றிடப் பழகுவாய்.*

*அந்தணப் பண்டிதர் அக்பர் சபையிருந்து*
*தந்தநூல் அல்லா உபநிஷத் இந்தநற்*
*சேதியை அண்ணலும் சையது டாக்டரும்*
*ஓதிக் களித்தனரோர் நாள்....(397)*

*இந்தப் பரந்த தத்துவத்தை, அக்பர் அரசவையில் எடுத்துக்கூறப்பட்ட 'அல்லோபநிஷத்' நூலைப்பற்றி டாக்டர் சையதுடன் பகவான் உரையாடினார்.*

*ஏதுமே பேசாத சாதுவின் மேனிக்குள்*
*வாதம் புகுந்தெதிர் வாதமிட பாதமாயூர்*
*வேதம் புகன்றிடும் வேப்பெண்ணை சாறுண்டால்*
*சேதம் குறையுமாம் சற்று....(398)*

*கால் வாதப் பிடிப்புக்கு வேப்பெண்ணை தைலம்.*

*சற்றெண்ணை பூசிடும் சாக்கில் பதத்தினைப்*
*பற்றிடப் போட்டியாம் பக்தர்க்குள் முற்றும்*
*துறந்தவர் கேட்பார் துளிக்கால் அளிப்பீர்*
*கறந்துகொள்வேன் புண்ணியம்கால் பங்கு....(399)*

*பகவானின் காலில் வேப்பெண்ணை தடவி, பாத ஸ்பரிஸம் பட்டால் பெரும்பேறு என்று அன்பர் பலர் போட்டிபோட, "நகருங்கள்! நானும் என் காலைச் சிறிதுநேரம் பிடித்துவிட்டுக் கொள்கிறேன். எனக்கும் சிறிது புண்ணியம் கிடைக்கட்டும்!" என்றார் பகவான்.*

*காலன் புறமுதுகு கண்டமுக் காலர்க்கு*
*தோளின் எலும்புகள் தேய்ந்திட மேலும்*
*அணிலுக்காய் நாயை அடிக்கப்போய் தோளில்*
*பிணியுற்றார் பட்டை பிளந்து....(400)*

*காலனையே புறமுதுகிடச் செய்த பகவானின் எலும்புகள் காலப்போக்கில் தேய்ந்து வலுவிழந்தன. அணிலைத் தாக்க வந்த நாயை விரட்டிப்போய் விழுந்ததில் பகவானின் கை எலும்பு முறிந்தது.*

# ஔவைக் குறள்

## ராம் மோஹன்

குறள் 91: பக்தியால் உள்ளே பரிந்தரனைத் தான்நோக்கில்
முத்திக்கு மூலம் அது.

பொருள்: பக்தி என்பதன் பொருள் இறைலட்சியத்திலேயே பொருந்திய மனம் என்பதாம்.

முக்தி என்பது சுத்த மௌனத்தில் இறையோடு கரைதல்.

விசார யோகத்தில் பயிலும் சாதகன், அசைவற்ற நிலையான மனத்தோடு, சுத்த மௌனத்தில், எண்ணம் முழுதையும் இறையுணர்வில் ஒன்றி, பேரன்புடன் மனத்தை உள்நோக்கித் திருப்பி, இதயத்தில் ஒடுங்கினால் அதுவே ஆத்ம சாட்சாத்காரத்தின் மூல வழியாகும்.

ஒப்பு: திரும்பி அகந்தனைத் தினமகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா
(மணமாலை 44)

மாற்ற மனம் கழிய நின்ற மறையோன் (சிவபுராணம்)

குறள் 92: பாடியும் ஆடியும் பல்காலும் நேசித்துத்
தேடும் சிவசிந்தை யால்

பொருள்: 'நாதம்' எனப்படும் மந்திர ஒலியாலும் நடனம் எனப்படும் சாலன தந்திர வழிபாட்டாலும் மனத்தை சிவனோடு ஒன்றிடச் செய்யலாம்.

விளக்கம்: மனம் ஒன்றும் பயிற்சிகள் பல கலைகளில் உள்ளன. அதில் தலையாயது இசையால் இறைவனுடன் தொடர்பு கொள்வது.

குண்டலினி யோகத்தில் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, சாம்பவி முத்திரையைப் பயின்று, அசைவற்ற

*மனத்தோடு விசாரம் செய்தால் ஸுஷும்னா (சுழுமுனை நாடியில் உள்ள ஓங்கார நாதம் கேட்கும்" என்று சிவயோக சாஸ்திரங்கள் கூறுகின்றன.*

*இதையே விநாயகர் அகவலில் ஔவையார்*

*"சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி" என்று கூறுகிறார்.*

*குறள் 93: அன்பால் அழுதும் அலறியும் ஆள்வானை*
*என்புருகி உள்ளே நாளை.*

*[ஆள்வானை=ஆட்கொள்ளும் சிவனை]*

*பொருள்: சிவன்மேல் கொண்ட பேரன்பினால் அழுதும் பதைபதைத்தும் அலறியும் எலும்பு உருக ஆழ்ந்த பக்தி செய்தால், இறைவனை அடையலாம்.*

*ஒப்பு: தாயுமானவர்:*

*அன்பினால் உருகி விழிநீர் ஆறாக,*
*ஆராத முக்தியினது ஆவேச ஆசைக் கடற்குள் மூழ்கி*

*மாணிக்கவாசகர்:*

*மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை*
*யார்கழற்குஎன்*
*கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி*

*மிக உயர்ந்த பரபக்தி நிலையில் உடம்பு முழுதும் வியர்வை அரும்பி, உணர்வு வெள்ளம் பாய்ந்து, கை தானே சிரத்தின் மேல் அஞ்சலி செய்து ஆனந்தக் கண்ணீர் பெருகுவதை மணிவாசகர் விவரிக்கிறார்.*

*குறள் 94: பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து*
*நேசத்தால் ஈசனைத் தேடு.*

*பொருள்: உடல்-மனம்-ப்ராணன் மூன்றும் ஒன்றி பூஜை செய்து, இறைவனின் அளவற்ற அருளைப் புகழ்ந்து பாடி, உள்முகமாக உன் நோக்கினைத் திருப்பி தியானம் செய்து, இறைவனை உன் இதய அதிர்வில் உணர்வாய்.*

*விளக்கம்:* பகவான் உபதேச உந்தியாரில் கூறும் ஆன்மிக ஏணிப் படிகளை நினைவு கூர்க.

*திடம் இது பூசை ஜபமும் தியானமும்*
*உடல்வாக்கு உளம் தொழில் உந்தீபற*
*உயர்வாகும் ஒன்றில்ஒன்று உந்தீபற (உந்தியார், 4)*

இந்த ஏணியில் முதல்படி மனம்-வாக்கு-உடல் மூன்றும் ஒன்றாக இணைந்து வழிபடும் கிரம பூஜை முறை. அதில் முதிர்ச்சி அடைந்தபின் அடுத்தநிலையில், உடல்-செயல் விடுபட்டு மனமும், பிராணனும் மட்டும் இணைந்து செயல்படும் ஜபம். அதில் முன்னேறிய பின் பிராணனுக்கு வேலை இல்லை. மனம் மட்டுமே உள்நோக்கிச் செயல்படும் தியானநிலை. இவை ஒன்றை விட ஒன்று உயர்ந்த நிலை என்கிறார் பகவான்.

குறள் 95: *கண்ணால் உறப்பார்த்து காதலால் தான்நோக்கில்*
*உண்ணுமே ஈசன் ஒளி.*

*பொருள்:* சாதகன் தன் இதயத்தில் உறையும் பரமாத்மாவைத் தன் அகக் கண்ணால் தியானித்து அந்தப் பரமாத்மாவின் ஞானஒளி பரத்தை மறைக்கும் கிரந்திகளை (முடிச்சுகளை) அழித்து விடும்.

குறள் 96: *நல்லானைப் பூசித்து நாதன் என உருகில்*
*நில்லாதோ ஈசன் நிலை.*

*பொருள்:* ஸத்யமே உருவான ஸத்குருவை பூஜைத்து சிவனே என்னை ஆட்கொண்ட தலைவன் என இதயக் குகையில் தியானித்தால் இறைவன் அங்கே நிலைபெற்று நிற்பான்.

குறள் 97: *அடியார்க்கு அடியராய் அன்புருகித் தம்முள்*
*படிஒன்றிப் பார்த்துக் கொளல்.*

*பொருள்:* இறைவனின் அடியார்க்கு எல்லாம் அடியானாகி இறைவன் திருவடிமேல் பேரன்புகொண்டு, இதயத்துள் ஆழ்ந்து அந்தப் பரத்தில் ஒன்றுவதே பரபக்தி.

*விளக்கம்: இந்த வழிபாட்டை விவரமாகக் கூறும் திருமூலர் பாடல் இதோ:*

***ஆறு அந்தமும் கூடி ஆகும் உடம்பினில்***
***கூறிய ஆதாரம் ஆறும் குறிக் கொண்மின்***
***ஆறிய அக்கரம் ஐம்பதின், மேலாக***
***ஊறிய ஆதாரத்து ஓர் எழுத்தாமே.***

*இதன் அர்த்தமாவது: சொல்லும் பொருளும் ஆகிய வழிகள் ஆறு. அவை முறையே அக்ஷரங்கள் எனவும் உள்ளார்ந்த தத்துவங்கள் எனவும் கூறப்படும். இவற்றைக் கொண்டு உடலும், உலகமும் இயங்குகின்றன. இவை அனைத்திலும் அடங்கியுள்ள பரம்பொருளை, நமது உடலின் ஆறு ஆதார சக்கரங்களில் நிலைபெற்றுள்ளதை அறிந்து, அந்த ஆதாரங்களில் மனத்தை நிலைநிறுத்தி, அசைவின்றி வழிபடுங்கள். அங்கே அமைந்துள்ள ஐம்பது அக்ஷரங்கள், மேலும் அவற்றின் மேல் அமைந்துள்ள மூலாதார எழுத்தாம் "ஓம்" என்று ப்ரணவத்தில் இருந்து ஞானஅமுதம் பெருக்கெடுக்கும்.*

*[ஆறு அந்தம்=சம்சாரத்தை அடைக்கும் வழி*
*ஆறிய=அமைந்துள்ள*
*ஓர் எழுத்து=பிரணவம்]*

*ஆறு ஆதாரங்கள்:*

*மூலம்=முதுகுத் தண்டின் இறுதி மூலாதாரம்*

*தொப்புள்=ஸ்வாதிஷ்டானம்*

*மேல் வயிறு=மணி பூரகம்*

*இதயம்=அனாவரதம்*

*தொண்டை=விசுத்தி*

*புருவமத்தி=ஆக்ஞா*

*குறள் 98:* ***ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்***
***நேசத்தால் நீ நினைந்து கொள்.***

*பொருள்:* எல்லா உயிர்களையும் ஈஸ்வரஸ்வரூபம் என்று உளம் நிறைந்த அன்பால் தியானிக்க வேண்டும்.

*விளக்கம்:* பகவான் ரமணரின் வாழ்க்கையே இந்தக் குறளுக்கு விளக்கம். தன்னை நாடிவந்த அடியார் மட்டுமன்றி அனைத்து உயிர்களையுமே - நாய், மான், குரங்கு போன்ற விலங்குகள், மயில் காகம் போன்ற பறவை இனங்கள், காயம்பட்டுப் பறக்க முடியாத புறாக்கள், கால் ஒடிந்த நாயினம், கிளை ஒடிந்த மரங்கள், தன்னிடம் பக்தியுடன் வந்த கல்வி அறிவற்ற கிராமத்து மக்கள் - அனைவரையுமே நேசத்தால் அரவணைத்தவர் பகவான்.

எத்துணையும் பேதம் உறாது
  எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை உரியவராய் உவக்
  கின்றார் யார் அவர் உளந்தான்
சித்துருவாய் எம் பெருமான் நடம்
  புரியும் இடம்.

என்ற வள்ளலார் வாக்கின் எடுத்துக்காட்டு பகவான்.

குறள் 99: மெய்ம்மயிர் கூர விதிர்ப்புற்று வேர்த்துஎழுந்து
  பொய்ம்மையில் ஈசனைப் போற்று.

*பொருள்:* உன் உள்ளத்தில் ஈசனை இடையறாது நினைக்கும் பரபக்தியால் இறையுணர்வு பொங்கித் ததும்பி, மயிர்க் கூச்செறிய வியர்வை அரும்பி, மனம் உள்முகமாகி இதயத்தில் ஆழ்ந்து, பொய்ம்மை எல்லாம் நீங்கிய பரமாத்மாவை உள்ளே உணர்வாயாக!

குறள் 100: செறிந்துஅறிந்து நாடியே செவ்விதாய் உள்ளே
  அறிந்துஅரனை ஆய்ந்து கொளல்.

*பொருள்:* தீவிரமான ஆத்ம சாதனையால் இறைவனுடன் ஒன்றுவதே நோக்கமாய்க் கொண்டு, உண்முகமாய் மனத்தைத் திருப்பி, இதயத்தில் உள்ளே உறையும் இறைவனை, ஞானத்தை மறைக்கும் தடைகளை நீக்கி அறிந்து கொள்ளலாம்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹறன்

### 18. குகைகளுக்குப் பயணங்கள்

பகவான் ஆலயக்கூடத்தில் இல்லாத இந்த நாட்களை நான் அருணாசலத்துள் உள்ள பல்வேறு குகைகட்குச் சென்று பார்க்கப் பயன்படுத்திக் கொண்டேன். தன்னுடைய கூரிய சிகரம்கொண்டு வான மண்டலத்தையே சுட்டுவதுபோல் உயர்ந்திருக்கும் அருள்மலையின் மீது நான் பயணித்தேன். அண்ணாமலையில் பகவான் தன் இளவயதில் வசித்த ஒவ்வொரு குகைக்கும் நான் சென்றேன். அவற்றுள் பிரசித்தி பெற்ற விரூபாட்ச குகை. இதற்குள்தான் இளையரமணர் பல்லாண்டுகள் இதயத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு இருந்தார். இந்தக் குகை பல்லாண்டுகட்கு அங்கே இருந்த ஒரு மஹா யோகியின் சமாதிஸ்தலம் என்று கூறப்படுகிறது.

அண்ணாமலையின் சாரலில் இந்தக் குகைக்குச் செல்லும் பாதையை நான் எளிதில் கண்டறிந்தேன். அங்கே வெளியே துருத்திக்கொண்ட ஒரு பெரிய கற்பாறையையும் அதன்கீழே தளம் இடப்பட்ட ஒரு தாழ்வாரத்தையும் கண்டேன். அதைச் சுற்றிலும் ஒரு இரும்பு வேலியும் பூட்டப்பட்ட கதவும் இருந்தன. அந்தக் கதவுகள் துருப்பிடித்த பூட்டு ஒன்றால் பூட்டப்பட்டு இருந்தது. அங்கே யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் குகையைச் சுற்றி வலம் வந்த நான், சில செந்நிற மலர்களைப் பறித்துக்கொண்டு ஒரு பெரிய பாறையின்மீது அமைதியாக அமர்ந்தேன். நான் அறைக்குத் திரும்பலாம் என்று எண்ணிய சமயம்

நடுத்தர வயதுள்ள ஒருவர் மலையிலிருந்து இறங்கி குகைக்கருகில் வருவதைக் கண்டேன். அவர் என்னை இந்து முறைப்படி கைகுவித்து வணங்கினார். நானும் அதுபோலவே கரங்களை ஒன்றாக நெஞ்சிற்கு முன் சேர்த்து அவரை வணங்கினேன். அவர் அந்தச் சிறு கதவைத் திறந்து உள்நுழைந்து என்னையும் உள்ளே வருமாறு அழைத்தார். அந்த மிகக் குறுகிய கதவுக்குள் நுழைய நான் உடலைப் பாதியாகக் குறுக்கி உள்ளே செல்ல வேண்டி இருந்தது.

உள்ளே 9 அடிக்கு 9 அடி பரப்பளவு உள்ள, மலைப் பாறையிலிருந்து வெட்டப்பட்ட சிற்றறையில் ஒரு கனசதுரமான பீடம் தரையிலிருந்து ஐந்தடி உயரத்தில் அமைக்கப்பட்டு காட்டு மஞ்சள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மத்தியில் நீல நிற மலர்கள் தூவப்பட்டு, ஒரு தீபம் எரிந்து கொண்டு இருந்தது. கற்பாறைச் சுவரில் ஓர் அலமாரி செதுக்கப்பட்டு, அதில் ஒரு தண்ணீர்க் குடுவை வைக்கப்பட்டு இருந்தது. அதன் அருகில் எனது புதிய நண்பரான அந்தத் துறவி, தான் கொணர்ந்த உணவு அடங்கிய பாத்திரம் ஒன்றை வைத்தார். அதைத் தவிர அங்கே வேறு ஒரு பொருளும் இல்லை. அந்தப் பீடத்தின் எதிரில் சுத்தமாக்கப்பட்ட தரைத் தளத்தின்மீது நான் அமர்ந்தேன். அந்தத் துறவியும் அவ்வாறே அமர்ந்தார்.

நாங்கள் மௌனமாய் இருக்கும்போதே ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டோம். என்னுடைய பயணத்தின் நோக்கம் அவர் அறிந்திருந்தார். இந்த சமாதி பீடத்திற்கும் அந்தத் துறவிக்கும் இடையே உள்ள ஆன்மிகப் பிணைப்பையும் நான் அறிந்தேன்.

மத்தியான வேளையில், மலையின் சற்று மேலே உள்ள ஸ்கந்தாச்ரமம் என்னும் மற்றொரு குகையை நான் அடைந்தேன். விருபாக்ஷ குகையிலிருந்து நீங்கி

பகவான் தங்கிய அடுத்த ஸ்தலம் இது. இதன் பின்னர் அவர் கீழே வந்து தங்கத் தொடங்கினார். கீழேதான் அன்னை சமாதியும் மாத்ருபூதேஸ்வரர் ஆலயமும் மற்ற கட்டிடங்களும் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்கந்தாச்ரமத்தில், விருபாக்ஷ குகையில் இருப்பது போலவே உலோகக் கம்பி, கல்பீடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் உள்ள வனத் தோப்பிலிருந்தும், சிறிய மலர்த் தோட்டத்திலிருந்தும் பாறைகளின்மீது படிகள் வெட்டப்பட்டு, அந்தப் பாதை ஒரு பெரிய கூடத்திலும், சில அறைகளிலும் முடிவடைகிறது. நான் சென்ற அந்த நாள் ஒரு இந்து பண்டிகை தினமாகும். எனவே பண்டிகைக்கேற்ப தம்மை அலங்கரித்துக் கொண்டு நிறைய எண்ணிக்கையில் பெண்டிரும் ஆடவரும் பனை மரங்களின் நிழலில் தாழ்வாரத்தில் காத்திருந்தனர். அமைதியும் அறிவும் ஒளிரும் முகம் கொண்ட இளைஞர் ஒருவர் என்னை நாடி வந்தார். அவர் உள்ளே செல்லும் கதவு வழியாக என்னை அழைத்துச் சென்றார்.

ஸ்கந்தாச்ரம குகையும் விருபாக்ஷ குகை போல்தான் இருந்தது. ஆயினும் இதனுள் சில வசதிகள் இருந்தன. அதைப் போலவே இங்கும் குகையின் நடுவில் ஒரு பீடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. தீபம் ஒன்று சுடர் விட்டுக்கொண்டு இருந்தது. சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன் எடுக்கப்பட்ட, இளம்வயது பகவான் தியானக் கோலத்தில் அமர்ந்திருக்கும் புகைப்படம் ஒன்று பீடத்தின்மீது வைக்கப்பட்டு இருந்தது. வண்ண நூல்களால் பின்னப்பட்ட பாய்கள் சில கூடத்தில் விரிக்கப்பட்டு இருந்தன.

அந்த இளம் துறவி கைகளைக் கூப்பிக்கொண்டு, பகவானை வணங்கிக்கொண்டு இருந்தார். இந்தக் கற்பாறை ஆச்ரமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சிற்றறைகள் இருந்ததால், பல்லாண்டுகளுக்கு முன்

பகவான் தங்கியிருந்த அறை இதுதானா என்று வினவினேன். அதற்கு அவர் ஒப்புதலாகத் தலை அசைத்தார். பின்னர் வெளியே சென்று விபூதி நிரம்பிய ஒரு தட்டுடனும் மற்றும் குங்குமக் கிண்ணத்துடனும் திரும்பி வந்தார். விபூதியை மூன்று கோடுகள் நெற்றியிலும் குங்குமத்தைப் பொட்டாக புருவ மத்தியிலும் அணிய வேண்டும். இதை எப்படிச் சரியாக அணிவது என்பதைச் சரியாக அறியாததால் நான் சற்றுத் தயங்கினேன். என் தயக்கத்தைப் புரிந்துகொண்ட இளந்துறவி, உடனே மூன்று விரல்களைக் கொண்டு எப்படி மூன்று கோடுகளைத் தரிப்பது என்று செய்முறை விளக்கம் காட்டினார். அதேபோல் நானும் அணிந்து கொண்டேன். அதன்பின் அமைதியாகக் கூடத்தின் நடுவே அமர்ந்து கொண்டேன். மகரிஷி முன்னாளில் இருந்த சிற்றறையின் அருகே அமர்ந்திருந்தேன். தியானத்தில் ஆழ்ந்து, எனது ப்ரக்ஞை உணர்வை வெளிப் பொருட்களிலிருந்து விலக்கி அனைத்தையும் எம் மனத்திரையில் இருந்து நீக்கினேன். ஆரம்பத்தில் என் எதிரே அமர்ந்திருந்த பெண்களின் உருவங்கள் மறைந்தன. அதைத் தொடர்ந்து வெண்தாடி கொண்டு என் அருகில் அமர்ந்த முதிய துறவியின் உருவம், அவர் மென்குரலில் உச்சரிக்கும் மந்திரத்துடன் மறையத் துவங்கியது. நான் சுத்த மௌனமாம் தியானத்தில் மூழ்கினேன்.

இங்ஙனம் ஆழ் மனத் தியானத்தில் நான் கரைந்த பின், மீண்டும் புற உலகிற்குத் திரும்பியபோது, தொலைவில் இருந்து ஆஸ்ரமத்தின் உணவுக் கூட மணி ஒலிக்கக் கேட்டேன். இந்த அமைதியான மாலை நேரத்தில், மௌனம் ததும்பும் சூழலில் பலமைல் தூரங்களுக்கு ஒலியைக் கேட்கலாம். நான் வார்த்தை ஏதுமின்றி மௌனமாக ஸ்கந்தாச்ரமவாசிகளிடம் விடைபெற்று கல்பாறை மீது நடந்து ஆஸ்ரமம் திரும்பினேன். இன்றுதான் முதன்முறையாக உணவுக்



கூடத்தில் விபூதி, குங்குமம் போன்ற இந்து சமயச் சின்னங்களைத் தரித்துக்கொண்டு அமர்ந்தேன். இது நான் ஆத்மிக வாழ்வில் பூரணமாக ஆழ்ந்து விட்டேன் என்பதைச் சுட்டியது. பகவான் வழக்கமாக அமரும் இடம் காலியாகவே இருந்தது.

எனக்கு எதிரில் அப்போதுதான் வந்திருந்த ஒரு மகாராஜாவின் குடும்பத்தினர் அரசர் அவர் மனைவி மகன் மற்றும் மகள் அமர்ந்து இருந்தனர். இடது புறம் யோகி ராமையாவின் வழக்கமான இடம், வலதுபுறம் பகவானின் மூத்த சீடர்களும் ஆஸ்ரமவாசிகளும் அமர்ந்திருந்தனர். மகாராஜாவின் குடும்பத்தினர் என் கையில் வைத்திருந்த ஸ்பூனையே பெருமையுடன் நோக்குவதாக எனக்குத் தோன்றியது. ஏனெனில் உண்ணும்போது, குறிப்பாக திரவங்களை அருந்தும்போது, மிக சௌகர்யமான துணை. அவர்கள் அரண்மனையில் உள்ளபோது ஸ்பூனைக் கொண்டுதான் சாப்பிட்டுக் கொண்டு இருந்திருப்பர். பாவம், ஆஸ்ரம சம்பிரதாயப்படி இங்கே அவர்கள் கைகளினால்தான் சாப்பிட வேண்டும்!

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## வலையபட்டியும் வேங்கடரமணரும்

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் ஞானோதயம் பெற்ற புனித ரமண மந்திரத்தில் எண்ணற்ற அன்பர்கள் தினசரி வந்து தியானம் மற்றும் சத்சங்கத்தில் ஈடுபடுவதுண்டு அதில் குறிப்பாக சுமார் 80 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் பகவானின் புகைப்படத்திற்கு முன்னால் மண்டியிட்டு மனமுருகி வணங்கிக் கொண்டிருப்பதைப் பலரும் பார்த்துவிட்டுச் செல்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் ரமண மந்திரத்தில் மார்கழி மாதம் காலைப் பாராயணத்தில் தவறாமல் கலந்து கொள்வார். யார் இந்த முதியவர்? எவ்வாறு பகவானிடம் இவ்வளவு ஈடுபாடு உடையவரானார் என்பதைத்தான் இம்முறை பார்க்கப் போகிறோம்.

மதுரையின் மிகப்பாரம்பரியமான ஒரு தனியார் தொழிற்சாலையில் வேலை பார்த்துவந்துள்ளார் திரு.பரமன் அவர்கள். 1993-ஆம் ஆண்டு பணி ஓய்விற்குப் பின்னர் திருக்கோவில்கள் மற்றும் சித்தர்களின் ஜீவசமாதி தரிசனம் செய்வதிலும் நாட்களை கழித்து வந்துள்ளார். அப்படி ஒரு சமயம் மதுரைக்கு மிக அருகில் (40 கி.மீ.) உள்ள கிராமத்தில் உள்ள இவருடைய உறவினர் வீட்டிற்கு சென்றிருக்கும்போது இங்கு சுவீடன் நாட்டைச் சேர்ந்தவரின் சமாதி ஒன்று இருக்கிறது என்று இவரை அழைத்துச் சென்றுள்ளனர். அங்குச் சென்று சிறிது நேரம் அமர்ந்து விட்டு கிளம்பும் போது அந்தப் பகுதியில் வந்த ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன், “ஐயா! அருகிலேயே இன்னொரு சாது இருக்கிறார்; அவரையும் சென்று தரிசியுங்கள்” என்று கூறியவுடன்

*எந்தவித யோசனையின்றி அந்த இடத்திற்குச் சென்றுள்ளார். தூரத்தில் காவிநிற உடையுடன் ஒரு சாது அமர்ந்திருப்பதைக் கண்டுள்ளார். அவர் அருகில் சென்று, "சாமி! உங்களை இதற்கு முன்னால் நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்று கூறியுள்ளார். அந்த சாதுவின் கனிவான பார்வையினால் மிகவும் ஈர்க்கப்பட்டு அவரை அடிக்கடி சென்று வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். நாட்கள் இப்படியே நகர்ந்து கொண்டிருக்கும்பொழுது இல்லற வாழ்வில் ஏதோ வெறுமையை உணர்ந்திருக்கிறார். ஒரு இனிய காலைப் பொழுதில் காசிக்கு நடைபயணமாகச் செல்லலாம் என்ற எண்ணம் உதித்திருக்கிறது. செல்லும் வழியில் தனக்குத்தெரிந்த வெல்டிங் தொழிலைச் செய்து கொண்டு அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பயணத்தை மேற்கொள்வோம் என்று வீட்டில் யாரிடமும் கூறாமல் புறப்பட்டிருக்கிறார். மதுரையிலிருந்து கிளம்பி திருச்சி, சிதம்பரம், வடலூர் என்று வழிபாடு செய்துகொண்டே திருவண்ணாமலைக்கு வந்துள்ளார் நேராக அண்ணாமலையார் கோவிலுக்குச் சென்று உண்ணாமலை உடனுறை அருணாசலேஸ்வரரை தரிசித்து முடித்து ஆயிரங்கால் மண்டபம் அருகில் செல்லும்போது 'பாதாள லிங்கத்திற்குச் செல்லும் வழி' என்று அம்புக்குறியிட்ட தகவல் பலகை இருப்பதைக் காணும்போது இவருக்குத் தெரியவில்லை தன்னுடைய வாழ்க்கையின் திசையையே இந்த இடம் மாற்றப் போகிறது என்று. படிக்கட்டுகள் இறங்கி பாதாள லிங்கத்தைத் தரிசனம் செய்துகொண்டிருக்கும்போது கருவறைக்கு மேலே பகவான் ஸ்ரீ ரமணரின் 21 வயது புகைப்படத்தை பார்த்திருக்கிறார் (இன்றும் பாதாள லிங்கத்தில் அந்தப் புகைப்படத்தை நாம் காணலாம்). கீழே பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் எழுதியிருப்பதை கண்டு, யாரைய்யா இவர்! நம்மைப் போலவே சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டப்பட்டிருப்பார் போல. நாம்*

ஏன் மதுரையில் இவர் பேரிலே ஒரு முதியோர் இல்லம் துவங்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது. உடனே காசிக்குச் செல்லும் பயணத்தை ரத்து செய்து விட்டு மதுரைக்குக் கிளம்பியுள்ளார். அதற்கு முன்னர் கும்பகோணத்தில் இருக்கும் தன்னுடைய நண்பரைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று எண்ணி அவருடைய வீட்டிற்குச் சென்றுள்ளார். இவர் அந்த நண்பர் வீட்டிற்குச் செல்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் தான் மதுரையிலிருந்து இவர் அங்கு ஏதும் வந்துள்ளாரா என தொலைபேசியில் வினவியுள்ளனர். இவரைப் பார்த்த உடனே இவருடைய நண்பர், “என்னய்யா நீயா! உன் இஷ்டத்திற்கு வீட்டில் சொல்லாமல் கூட கிளம்பிவந்துட்ட” எனக்கூறி அன்றிரவு அவரை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு மறுநாள் காலையில் அவரை அழைத்துக்கொண்டு திருச்சியில் உள்ள அவருடைய உறவினர் வீட்டிற்கே சென்று விட்டுவிட்டு திரும்பியுள்ளார்.

மதுரைக்கு வந்து சேர்ந்தவுடன் இவர் செய்த முதல் வேலை அரசரடியில் உள்ள ஒரு காலி மனையில் ஸ்ரீ ரமண மகரிஷி முதியோர் இல்லம் என்ற பெயர் பலகையை மாட்டியதுதான். அந்தப் பெயர்ப்பலகை சுமார் ஒரு ஆண்டு காலம் அங்கேதான் இருந்தது. இதைப் பற்றி யாரும் எதுவும் இவரைக் கேட்கவில்லை. இந்த விஷயங்கள் எதுவும் இவர் வீட்டிற்குத் தெரியாது. இவர் முதன்முதலில் குட்லாடம்பட்டியில் சந்தித்த சாதுவை அடிக்கடி சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார். அவரிடம்கூட இந்தச் சம்பவங்களைப் பற்றி ஏதும் கூறவில்லை.

ஒருமுறை இவருடைய பேத்தி தான் படிக்கும் பள்ளியில் பகவான் ரமண மகரிஷிகள் பிறந்தநாளை முன்னிட்டு ஒரு ரமண நாட்டிய நாடகம் நடைபெறுவதாகவும் அதில் தான் பங்கேற்க

இருப்பதாகவும் அவசியம் அதைக் காண இவர் வர வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டிருக்கிறார். அதன்கண் இவர் தன் குடும்பத்தினருடன் அங்கு சென்று நாடகத்தை மிகவும் ரசித்துப் பார்த்த பிறகுதான் 'ஸ்ரீ ரமண மந்திரம்' என்னும் ஒரு இல்லம் உள்ளது. அங்கு 1946-ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ ரமண ஜயந்தி விழாவானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தெரியவந்திருக்கிறது. அன்று மாலையே மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள ஒரு திருமண மண்டபத்தில் ரமண ஜயந்தி விழா நடைபெறுகிறது என்று கேள்விப்பட்டு அங்குச் சென்றிருக்கிறார் திரு.பரமன். அங்கு நிகழ்ச்சி அரங்கில் புத்தக விற்பனைப் பகுதிக்குச் சென்று பார்க்கும்பொழுது இவர் கண்ணில் முதலில் பட்டது திரு.காமத் அவர்களின் ஸ்ரீ ரமண மகரிஷி சித்திரங்கள் நிறைந்த சரிதச் சுருக்கம் என்னும் புத்தகம். அழகிய புகைப்படங்களுடன் பகவான் ரமணரின் வாழ்க்கையை பாமர மக்களும் புரியும் வண்ணம் அழகாக தொகுக்கப்பட்ட அந்தப் புத்தகத்தை உடனே வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு முதன்முதலாக ஸ்ரீ ரமண மந்திரத்திற்குச் சென்றுள்ளார். அதீத ஆர்வத்தினால் அடுத்த நாளே புறப்பட்டு பகவான் அவதரித்த திருச்சுழி ஸ்ரீ சுந்தர மந்திரத்திற்குச் சென்று வந்துள்ளார். இப்படியே வியாழன் மற்றும் ஞாயிறு தின சத்சங்கத்தில் தொடர்ந்து கலந்து கொள்வது என்று தன்னை ரமண குடும்பத்தில் முழுவதுமாக இணைத்துக் கொண்டுள்ளார்.

2003-ஆம் ஆண்டு ஒரு இனிய காலைப் பொழுதில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டிக்கு அருகில் இருக்கும் இவர் பிறந்த ஊரான வலையபட்டி கிராமத்தில் இருக்கும் காலி மனையில் ஏன் நாம் பகவானுக்கென்று 'ரமணாலயம்' என்ற ஆசிரமம் தொடங்கக் கூடாது என்ற எண்ணம் உதித்துள்ளது. உடனே அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளார். மீண்டும் ஒருமுறை

*குட்லாடம்பட்டிக்குச் சென்று அந்தச் சாதுவினைச் சந்தித்து நடந்த அனைத்து சம்பவங்களையும் கூறியுள்ளார். அதற்கு அந்த சாது நடப்பது அனைத்தும் பகவானின் செயல்களே! எதையும் பெரிய அளவில் தொடங்கிட வேண்டாம்; சிறிய குடில் ஒன்று மட்டும் அமைத்துக் கொள்ளுங்கள். அதில் பகவானின் புகைப்படம் ஒன்று வைத்து அருகில் சிறிய அகல்விளக்கு ஏற்றி வைத்து தினமும் அக்ஷரமணமாலையை மட்டும் பாராயணம் செய்து வாருங்கள் என்றுகூறி அதனுடன் பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களில் மதிய அன்னதானம் நடைபெறுவதற்குத் தேவையான அரிசி, காய்கறிகள், பலசரக்கு சாமான்கள் என்ற அனைத்தையும் வழங்கி இவரைக் கனிவுடன் அனுப்பி வைத்துள்ளார். அந்தச் சாதுவின் வழிகாட்டுதலின்படி இன்றளவும் தினசரி அக்ஷரமணமாலை பாராயணமும் மதிய அன்னதானமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திரு.பரமன் அவர்கள் திருச்சுழியில் உள்ள ரமணர் திருக்கோவில் சுவாமி சத்யானந்தா (மௌனசாமி என்றால் அனைவருக்கும் தெரியும். பூர்வாஸ்ரம பெயர் மணிகண்டன்) அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார். அவருடைய சீடர் சுவாமி சத்ய பிரபவானந்தா அவர்களே இந்த ரமணாலயத்தை இனிதே துவங்கி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*2005-ஆம் ஆண்டு திருச்சுழி ரமணர் திருக்கோவில் சுவாமி சத்யானந்தா அவர்கள் ஒரு ரமண ரதம் ஏற்பாடு செய்திருந்தார். அந்த ரமண ரதமானது ஒவ்வொரு கிராமமாக வலம் வரும்பொழுது ரமணாலயம் அமைந்திருக்கும் வலையபட்டி 108ஆவது கிராமமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. உலகெங்குமுள்ள ரமண மையங்களில் பகவான் ஜயந்தி, ஆராதனை போன்ற திருநாட்கள் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படுவது அனைவரும் அறிந்ததே. ஆனால்*

*இங்கு ரமணாலயத்தில் சற்று வித்தியாசமாக பகவான் ரமணருக்கு 16 வயதில் ஞானோதயம் கிடைத்த ஜுலை மாதத்தில் வரும் கடைசி ஞாயிறன்று ஞானோதய விழா கொண்டாடுவார்கள். மதுரை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்தும் பல அன்பர்கள் இந்த விழாவில் தவறாமல் கலந்து கொள்வார்கள். பகவான் இயற்றிய பாடல்களின் பாராயணம், சிறப்பு சொற்பொழிவு, குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குவது மற்றும் 1000 அன்பர்களுக்கு சிறப்பு அன்னதானம் என்று அன்றைய தினம் வலையபட்டி கிராமமே விழாக் கோலமாக காட்சியளிக்கும்.*

*திருச்சி ஸ்ரீ ரங்கம் ரமண பக்தரான திரு.சுந்தர்ராஜன் அவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நாம் சந்திக்கச் சென்றிருந்தபோது, அவருடைய இல்லம் மற்றும் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் வீட்டு வேலை செய்து வரும் திருமதி. மீனாட்சியம்மா என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். அவர் பகவானின் மீது மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் வேலை முடிந்த ஓய்வு நேரங்களில் பகவானின் புகைப்படத்திற்கு அருகே வந்து அமர்ந்து கொள்வதாகவும் தெரிவித்தார். மேலும் கலக்கமான மனநிலையுடன் வந்து அமர்ந்தால் நம்முடன் இந்த சாமி (பகவானின் புகைப்படத்தை சுட்டிக்காட்டி) பேசுவதை உணர முடியும் தம்பி என்று கூறினார். இதேபோன்று இங்கு ரமணாலயத்திலும் திருவனந்தபுரத்திலிருந்து ஒரு வயதான அம்மையார் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக ரமண சேவை செய்து வருகிறார். அதிகாலையிலேயே எழுந்து சுத்தம் செய்வது மதிய அன்னதானத்திற்கு தேவையான வேலைகளை தொடர்வது என்று பம்பரமாக சுழன்று கொண்டிருப்பார். இந்த ஆண்டு கொரோனா பாதிப்பினால் வழக்கமாக நடைபெறும் ரமண ஞானோதய விழா தடைபட்டிருப்பது மிகவும் வேதனையளிப்பதாக திரு.பரமன் அவர்கள் கூறி முடித்தார். கடந்த பிப்ரவரி மாதம் திருவண்ணாமலை*

ஸ்ரீ ரமணாச்ரமத்தைச் சேர்ந்த இனிய நண்பர் திரு.T.V.சந்திரமௌலி அவர்கள் இந்த ரமணாலயத்திற்கு வந்திருந்து பாராயணம் செய்துவிட்டுத் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளது நாற்பது அனுபந்தத்தின் முதல் 5 பாடல்களில் சாதுசங்கத்தின் பெருமையையும், புனிதத்தையும் அதனால் ஏற்படும் நற்பயன்களைப் பற்றியும் பகவான் அழகாக விவரித்துள்ளார். இங்கு பகவானின் பரிபூரண திருவருளினாலும் பல சாதுக்களுடன் ஏற்பட்ட தொடர்பினாலும் இந்த ரமணாலயத்தில் தனக்கு ஒரு இடம் கிடைத்திருக்கிறது என்று கருணை கூர்ந்து இருகரம் கூப்பி வணங்குகின்றார் இந்த பகவானின் பரம பக்தர். பொள்ளாச்சி திரு.பாலசுப்ரமணியத்திற்கு நூலகத்தில் கிடைத்த இரண்டு ரமண நூல்களே இன்று பல அக்ஷரமணமாலை புத்தகங்களை பகவானின் பிரசாதமாக தருவதற்கான காரணமாக அமைந்தது, ஆனந்த விகடனில் வெளிவந்த ரமணரின் புகைப்படமே இன்று ஒட்டன்சத்திரத்தில் ரமண கேந்திரம் நிறுவுவதற்கான காரணமாக அமைந்தது, இதேபோல் காசிக்கு நடைப்பயணம் மேற்கொண்டிருந்தவரை திருவண்ணாமலை கோவில் பாதாள லிங்கத்திற்கு வரவழைத்து அவருடைய கண்களில் இந்த 21 வயது புகைப்படம் தென்பட்டு பின்னர் இதுவே ஒரு ரமணாலயம் அமைவதற்கான காரணமாக இருந்துள்ளது என்பது அந்த அருணாசல ரமணரைத் தவிர வேறு யார் அறிவார். மீண்டும் ஒரு ரமண குடும்பத்துடன் பயணிப்போம்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் இருந்து பேரையூர் செல்லும் சாலையில் வருகின்ற முதல் கிராமமே வலையபட்டி ஆகும். உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் இருந்து நகரப் பேருந்துகள் வசதி உண்டு.

# சப்ரிஜிஸ்திரார் நாராயண அய்யர் – 2

**வி. நிரஞ்சன்**

**சென்ற இதழ் தொடர்ச்சி**

ஒருமுறை அய்யர் பகவானிடம் தைரியமாக கீழ்வருமாறு வினவினார்: ‘பகவானே மதுரையில் உங்களுடைய உறவினர் உங்கள் மீது அன்பு செலுத்தி பொருள் செலவழித்து உங்களைப் படிக்கவைத்துக் கொண்டிருந்தனர். நீங்களோ வீட்டை விட்டுக் கிளம்பிவீட்டீர்கள். அவர்களுடைய பணத்தை திருவண்ணாமலைப் பயணத்திற்காகத் தவறாய்ப் பயன்படுத்தி இருக்கின்றீர்கள். யாருக்கும் தெரியாமல் ரயில்வே நிலையத்திற்குச் சென்றிருக்கின்றீர்கள். கொண்டுவந்த பையைத் தொலைத்துவிட்ட பயணி என்று நடித்திருக்கின்றீர்கள். திருக்கோவிலூரிலே ஜோதி தரிசனம் நிகழ விம்மி அழுதிருக்கின்றீர்கள், இதெல்லாம் நேர்மையும் சரியும் ஆகுமோ?’

சற்றே அமைதி காத்த பகவான் பின்னர் இவ்வாறு விளக்கினார்: “‘பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்’ என்று குறள் சொல்லுகின்றது. பிறருக்குக் குற்றமற்ற நன்மையைப் பயக்கும் என்றால், பொய்யும் உண்மையாகக் கருதப்படும் என்கிறது குறள்.”

பகவானுக்கு அருகாமையிலேயே இருந்துவரும் பாக்கியம் பெற்றிருந்த அய்யர் பல்வேறு சூழ் நிலைகளில் தனது ஐயப்பாடுகளையும் குறைகளையும் வெளியிட்டு பகவானிடம் இருந்து விளக்கமும்

*ஆறுதலும் பெற்று சிறப்பாக வழிகாட்டப்பட்டுள்ளார். அய்யர் கேட்ட கேள்விகளையும் பகவான் அவருக்குக் கொடுத்து அருளிய விளக்கங்களையும் படிக்கும் தோறும் தமது ஐயங்களுக்கும் பகவான் விளக்கம் அளிப்பதுபோல் அன்பர்கள் உணருவர். அய்யர் நம் அனைவரின் பிரதிநிதியாகவே தோன்றுகின்றார். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.*

*'நான் பல ஆண்டுகளாக இங்கே இருக்கின்றேன். பலர் பகவானது சன்னிதியில் சமாதி உறுகின்றனர். நான் ஒரு நிமிடம் கண்ணை மூடினால் உலகத்தைப் பத்து தடவை மனது சுற்றிவருகின்றது. நீண்டகாலம் மறந்து போன விஷயங்கள் வருகின்றன,' என்று பகவானிடம் முறையிடுகின்றார் நாராயண அய்யர்.*

*"பிறரோடு ஏன் ஒப்பிட்டுக் கொள்கின்றீர்கள்? மனம் எப்பொழுதெல்லாம் வழிதப்பிச் செல்கின்றதோ அப்பொழுதெல்லாம் அதை விசாரத்திற்குத் திருப்புங்கள். கீதையிலும் கூட சதா சலித்து வெளியே அலையும் மனத்தைத் தடுத்து ஆன்மாவின் பால் அடக்கித் திருப்புங்கள் என்றே அறிவுறுத்தப்படுகின்றது" என்றனர் பகவான். இந்தப் பதில் நாராயண அய்யரைச் சமாதானப்படுத்தவில்லை. அவரைத் தேற்றும்முகமாக பகவான், "தூங்குகின்ற குழந்தைக்குத் தாய் பால் ஊட்டி விட அதுவும் தூக்கத்திலேயே பாலைக் குடித்துவிட்டு அடுத்த நாள் காலையில் தாயிடம், 'அம்மா நேற்று நீ எனக்குப் பால் தரவே இல்லை,' என்று கூறுகின்றது" (அந்தக் குழந்தையைப் போன்று நீங்கள் நினைத்தாலும் குருவருளை நீங்கள் பூரணமாய்ப் பெற்றிருக்கிறீர்கள்) என்று பகவான் பொருள்படக் கூறினார்.*

*ஒருநாள் நாராயண அய்யர் பகவானுக்கு அருகில் இருந்த சமயம் அவரது மனம் மிகவும் துயர் உற்றிருந்தது. அதனால் அவர் பகவானிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார். 'ஞானியின்*

*சங்கல்பம் பக்தர்களின் தீவினைப்பயன்களை மாற்றவல்லதாகாதா?'*

புன்முறுவலித்து பகவான் விடை பகர்ந்தனர். *"ஞானிக்குச் சங்கல்பம் உண்டா என்ன? ஜீவன் முக்தருக்கு எவ்வித சங்கல்பமும் உண்டாகாது. சங்கல்ப எழுச்சி ஜீவன் முக்தருக்கு எழவே முடியாது."*

நாராயண அய்யர் தொடர்ந்தார்: *'பின் எங்களுக்கு அருள் பாலியுங்கள், எங்களைக் காத்து அருளுங்கள் என்று வேண்டிக்கொள்ளும் எங்கள் கதி என்னாவது? நாங்கள் உங்களைத் தரிசிக்க வருகின்றோம். உங்கள் சன்னிதியில் அமர்ந்திருக்கின்றோம். இதனால் எல்லாம் நாங்கள் ஒருபயனும் அடைவதில்லையா, காப்பாற்றப் படுவதில்லையா? என்னைப்போன்ற இல்லறத்தார்கள் உங்கள்பால் வருவதால் என்ன நன்மை?'* நாராயண அய்யரின் கேள்விகளில் ஏக்கமும் கவலையும் மிகுந்திருந்தன.

கருணையோடு கூடி பகவான் நாராயண அய்யரிடம் ஞானியின் சன்னிதியில் நிகழும் அற்புதத்தைப் பின்வருமாறு விளக்கினார்: *"தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விடுகிறது என்பதுபோல் ஞானியின் சன்னிதியில் இருக்கும் ஒருவனுடைய தீவினைப்பயன் பெரும் அளவு குறைக்கப்படும். ஞானிக்குச் சங்கல்பம் கிடையாது. ஆனால் அவருடைய சன்னிதி ஆற்றல் மிக்கது. அவர் சங்கல்பிக்கத் தேவை இல்லை. ஆனால் அவருடைய அதி வல்லமையான சன்னிதியின் மேன்மை அற்புதங்களைச் செய்யும், ஜீவர்களைக் காக்கும், மன நிம்மதியைத் தரும், பக்குவ ஜீவர்களுக்கு முக்தியைக்கூட அருளும். உங்களுடைய பிரார்த்தனைகள் ஞானியால் நிறைவேற்றப் படுவதில்லை. ஆனால் பிரார்த்தனைகள் ஞானியின் சன்னிதிக்குள் ஈர்க்கப்பட்டு விடுகின்றன. அவருடைய சன்னிதிதான் உங்களைக் காக்கின்றது,*

*தீவினைப்பயனைத் தடுத்து விடுகின்றது, சிலருக்கு வரங்களையும் தருகின்றது, எல்லாமே சங்கல்பத்தினால் அல்லாமல் தானாகவே நிகழ்கின்றது. தன்னிடத்து சங்கல்பம் ஏதும் அற்ற ஞானி பக்தர்களைக் காப்பாறுகின்றார் தனது சன்னிதியினால்."*

இவ்வாக்கினைக் கேட்ட அய்யர் மனமகிழ்வு எய்தினார். பகவானின் சன்னிதி மகிமையினால் தான் காக்கப்படுவதைத் திடமாக உணர்ந்து களித்தார். மனித உருக்கொண்ட பரம்பொருளே பகவான் என்று திடமாய் அறிந்துகொண்டார்.

பகவானது வழிகாட்டுதல் தொடர்ந்தது; அரிய விளக்கங்கள் மூலம் அடிக்கடி மனம் தளரும் அய்யரை ஊக்குவித்து பகவான் ஆன்மஞான அடைவிற்கு ஓர் எளிய வழியை அய்யருக்குக் கிருபை செய்து அருளினார்.

# இனிவரும் திருநாட்கள்

## 2020

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் | 14 | சனி | தீபாவளி |
| | 20 | வெள்ளி | கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் |
| | 29 | ஞாயிறு | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 31 | வியாழன் | பகவானது 141 ஆவது ஜயந்தி |

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2020

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 30 | வெள்ளி | மாலை 6.45 | 31 | சனி | இரவு 8.49 |
| நவம்பர் | 29 | ஞாயிறு | மதியம் 1.47 | 30 | திங்கள் | மதியம் 2.23 |
| டிசம்பர் | 29 | செவ்வாய் | காலை 8.40 | 30 | புதன் | காலை 9.18 |

# பகவான் ரமணருடன் ஒரு செல்ஃபி

### *பிர. கிரிதர ஜெகதீஷ்*

*மனதிற்குப் பிடித்தவர்களோடு செல்போனில் செல்ஃபி புகைப்படம் எடுத்துக் கொள்வது என்பது இப்பொழுதெல்லாம் சாதாரணமான வழக்கமாகி விட்டது. அதிலும் பிரபலமானவர்களோடு செல்ஃபி எடுத்துக் கொள்வது என்பது பரம புருஷார்த்தமாகிவிட்டது.*

*ஒரு சந்தோஷம்தானே! இதில் என்ன தவறு இருக்கிறது என்று நினைக்கலாம். தவறு ஒன்றுமில்லை. ஆனால் எது 'செல்ஃப்' [Self] என்று தெரிந்துகொண்டு அதை உணரத் தலைப்பட்டால் பூர்ண சந்தோஷம் கிடைக்கும். பெரிதினும் பெரிது கேள் என்பது பழமொழி. குறையுடைய உடலை செல்ஃபி எடுத்து மகிழ்வது என்பது மீண்டும் நம்மைக் குறையுணர்விற்கே இட்டுச் செல்லும். மாறாக நிறைவான ஆத்மாவை செல்ஃபி எடுப்பது எங்ஙனம் என்று அறிந்தால் என்றைக்கும் நிறைவாய் வாழலாம்.*

***ஆத்மாவை செல்ஃபி எடுப்பதா? எப்படி?***

*பகவான் ரமணர் அதற்கு வழி சொல்கிறார். பகவான் ரமணருடைய பாஷையில் செல்ஃபி என்பதனுடைய பொருள் நான் யார் என்ற விசாரம். உண்முக நாட்டம்.*

*'நான்' என்பதன் மீதே கவனம் இருக்கட்டும் என்பது ரமண உபதேசங்களின் பீஜமாகத் திகழ்கிறது.*

## ஞானம் என்றால் என்ன?

சரியான அறிவை ஞானம் என்று அழைக்கிறார்கள். கயிற்றினிடத்தில் கயிறு என்ற எண்ணம் இருந்தால் அதை ஞானம் என்று சொல்லலாம். ஆனால் கயிற்றைப் பாம்பாகப் பார்த்தால் அதை ஞானம் என்று சொல்ல முடியாது. காரணம் அது தவறு. ஆனால் சாஸ்த்ரம் அதையும் ஞானம் என்றுதான் சொல்கிறது. அதாவது நம்முடைய கண்ணினால் ஒரு பொருளைப் பார்த்து அது நம்முடைய மனதில் ஒரு எண்ணத்தை உற்பத்தி செய்தால் அந்த எண்ணத்தையே 'ஞானம்' என்று சாஸ்த்ரம் கூறுகிறது. அந்த எண்ணம் சரியான எண்ணமாக இருந்தால் யதார்த்தக் ஞானம் என்றும், அந்த எண்ணம் தவறாக இருந்தால் அயதார்த்தக் ஞானம் என்றும் கூறப்படுகிறது. அதாவது யதார்த்தக் ஞானம் என்றால் சரியான ஞானம். அயதார்த்தக் ஞானம் என்றால் தவறான ஞானம். தவறான ஞானத்தை ஞான ஆபாஸம்! ஞானத்தைப் போன்ற பொய்யான ஞானம் என்று கூறலாம். சரியான ஞானத்தை ஸாத்விக ஞானம் என்றும், தவறான ஞானத்தை ராஜஸ, தாமஸ ஞானம் என்றும் கூறலாம்.

பொதுவாக ஞானத்தை சாஸ்த்ரம் இரண்டாகப் பிரிக்கிறது.

அவைகளாவன:

1. ஸ்வரூ ஞானம்

2. விருத்திக் ஞானம்

விருத்திக் ஞானம் என்றால் 'எண்ணம்'. ஸ்வரூப ஞானம் என்றால் அனுபவம்.

பெங்காலி ரஸகுல்லா எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய வாக்யத்தால் மனதில் வருகின்ற 'எண்ணம்' என்பது 'விருத்திக் ஞானம்' என்று அழைக்கப்படுகிறது.

பிறகு, பெங்காலி ரஸகுல்லாவை சுவைத்துப் பார்த்து அதனால் மனதில் வருகின்ற 'அனுபவம்' என்பது 'ஸ்வரூப ஞானம்' என்று அழைக்கப்படுகிறது. ஆக, விருத்திக் ஞானத்தை 'கேள்வி ஞானம்' என்றும், ஸ்வரூப ஞானத்தை 'அனுபவ ஞானம்' என்றும் சொல்லலாம். சாஸ்த்ர திருஷ்டியில் கேள்வி ஞானத்தை 'பரோக்ஷ ஞானம்' என்றும், ஸ்வரூப ஞானம் அல்லது அனுபவ ஞானத்தை 'அபரோக்ஷ ஞானம்' என்றும் சொல்லப்படுகிறது. பெங்காலி ரஸகுல்லா விஷயத்தில் பரோக்ஷ ஞானம் என்றால் என்ன, அதேபோல அபரோக்ஷ ஞானம் என்றால் என்ன என்பது நமக்கு விளங்குகிறது. இனி, ஆத்மா அல்லது பர பிரம்ம விஷயத்தில் எது பரோக்ஷ ஞானம், எது அபரோக்ஷ ஞானம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

பகவான் ரமணர் கூறுகிறார்:

மாறாது என்றும் இருப்பது ஆத்மா மட்டுமே. ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. ஆனால் ஆத்மா மட்டும் தெரியவில்லை. அதற்குக் காரணம் ஆத்மா என்றால் 'நான்'. தெரிந்து கொள்ளும் நான் என்றும், தெரிந்து கொள்ளப்பட வேண்டிய நான் என்றும் இரண்டு நான்கள் இருக்கின்றனவா? 'தான் [The Self] என்பது என்றும் ஒன்றே அன்றி இரண்டல்ல. தானான ஆத்மாவானது பிளவற்றது. அது நீங்கா உணர்வுமயம்.'

பகவானது கூற்றுப்படி இரண்டு 'நான்'கள் இருந்தால் பரோக்ஷ நான் என்றும், அபரோக்ஷ நான் என்றும் பிரித்துவைத்து, முதலில் பரோக்ஷ நான்-ஐ பற்றிய கேள்வி ஞானத்தை அடைந்து, பிறகு அபரோக்ஷ நானாகிய அனுபவ நானுக்கு முயற்சி செய்யலாம். ஆனால் இருப்பதோ ஒரு நான். பகவான் ரமணரின் கூற்றுப்படி அந்த நான் என்பது நீங்கா உணர்வுமயம்.

இந்நிலையில் ஆத்மாவாகிய நான்-ஐ பற்றிய பரோக்ஷ ஞானம் என்றால் என்ன? அதேபோல அபரோக்ஷ ஞானம் என்றால் என்ன என்று பார்க்க வேண்டும்.

பிரத்யக்ஷம் என்றால் ஐம்புலன்களால் அறியப்படுவது என்பது பொருள். பரோக்ஷம் என்றால் இந்திரியத்திற்கு அப்பால் தூரத்தில் இருப்பது என்பது பொருள். இனி, எந்த ஒரு விஷயம் ஐம்புலன்களால் அறியப்படாமலும், அதேசமயம் ஐம்புலன்களுக்கு அப்பால் இல்லாததாகவும் திகழ்கிறதோ அந்த ஒரு விஷயத்தை சாஸ்த்ரம் அபரோக்ஷம் என்று கூறுகிறது. அதாவது அது அறியப்படுவதும் அல்ல; அறியப்படாததும் அல்ல. அப்படிப் பார்த்தால், இந்த 'நான்' என்பது ஐம்புலன்களை விட்டு எங்கோ அப்பாலும் இல்லை. அதேசமயம் ஐம்புலன்களுக்கு விஷயமாக முன்னிலைப் பொருளாகவும் இல்லை. 'நான்' என்ற தத்துவம் நம்மால் பார்க்கப்படும் பொருளும் அல்ல; நம்மால் பார்க்கப் படாமல் அதேசமயம் எல்லாவற்றையும் அறிகின்ற தத்துவமாக, ஸ்வயம் பிரகாசமாக, தாமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அனுபவிக்கப்படுவது என்கிற எல்லைக் கோட்டிற்குள் அதைக் கொண்டு வர முடியாது. பெங்காலி ரஸகுல்லாவைக் கண்ணில் மட்டும் காட்டிவிட்டால் அதைப் பற்றிய ஞானம் இருக்கும். ஆனால் அதைப் பற்றிய அனுபவம் என்பது இருக்காது.

அதுபோல எனக்கு அஹம் பிரம்மாஸ்மி ஞானம் இருக்கிறது. ஆனால் அஹம் பிரம்மாஸ்மி ஞான அனுபவம் இல்லை என்று சொல்லலாமா என்றால், சாஸ்த்ரம் சொல்கிறது: ஆத்ம விஷயத்தில் மட்டும் ஞானம், அனுபவம் இரண்டும் ஏக காலத்தில் நிகழக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அதாவது ஆத்ம விஷயத்தில் ஞானமே போதும். விசேஷ அனுபவம் என்பது தேவையில்லை. காரணம் ஆத்ம அனுபவம்

*என்பது ஏற்கனவே அடையப்பட்டே இருக்கிறது. ஆத்ம அஞ்ஞானத்தால் ஆத்ம அனுபவமானது மறைக்கப் பட்டிருக்கிறது. எனவே ஆத்ம ஞானத்தை நீக்கினால் ஆத்ம அனுபவம் என்பது நனி விளங்கும். ஆத்மஞானம் என்பது ஆத்ம அனுபவத்துடன் கலந்ததாகவே இருக்கிறது. இதையே சாஸ்த்ர ரீதியாகக் கூறினால், ஆத்மா அல்லது பிரம்ம விஷயத்தில் ஒன்று அஞ்ஞானம் இருக்கும் அல்லது அபரோக்ஷ ஞானம் இருக்கும். பரோக்ஷ ஞானம் என்பது ஆத்மா அல்லது பிரம்ம விஷயத்தில் சம்பவிக்காது.*

*உதாரணத்துடன் பார்ப்போம். ரஸகுல்லாவைப் பற்றிய ஞானம் என்பது வேறு. அதைப் பற்றிய அனுபவம் என்பது வேறு. அங்குப் பரோக்ஷ ஞானமும், அபரோக்ஷ ஞானமும் வேறு வேறாக இருக்கிறது. காரணம், ரஸகுல்லா என்பது ஸாத்ய வஸ்துவாக இருக்கிறது. ஸாத்ய வஸ்து என்பதற்கு தேடி அடையப்படுவது என்பது பொருள். யார் அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கு அந்நியமாக எதிர்காலத்தில் தேடி அடையப்படுவதாக எது இருக்கிறதோ அதுதான் ஸாத்ய வஸ்து. எனவே ஸாத்ய வஸ்துவிடம் பரோக்ஷ ஞானம் (கேள்வி ஞானம்) அபரோக்ஷ ஞானம் (அனுபவ ஞானம்) இரண்டும் சம்பவிக்கும். இனி, பிரம்மம் அல்லது ஆத்மா என்பது ஸாத்ய வஸ்துவா என்றால், இல்லை. காரணம், ஸாத்ய வஸ்துவாகிய பிரம்மத்தை நாம் அடைந்தால் அது இழக்கப்பட்டுவிடும். யார் அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கு அந்நியமாக, வேறாக இருக்கும் ஒன்று ஒரு காலத்தில் அவர்களைவிட்டு மறைந்து விடும். அப்படிப்பட்ட ஒரு பொருளை அனுபவிப்பதால் நிரங்குச திருப்தியாகிய மோக்ஷம் என்பது ஸித்திக்காது. நிரங்குசம் என்றால் எதையும் சாராதது. சுதந்திரமானது என்பது பொருள். எனவே ஆத்மா அல்லது பிரம்மம் என்பது ஸித்த வஸ்துவாக ஏற்கனவே அடையப்பட்ட*

*ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அதுவும் அனுபவிப்பவனுக்கு வேறாக இல்லாமல் அனுபவிப்பவனாகவே இருக்க வேண்டும். இதைத்தான் 'ந ப்ரமேயம் ஸ்வப்ரகாசம் ந வாசாமகோசரா' முன்னிலைப் பொருளாக இல்லாமல், ஸ்வயமாக தானாக விளங்குகிறது என்று ஸஹஸ்ரநாமம் சொல்கிறது. பகவான் ரமணர் இதற்கு அழகான உதாரணமாக ஒன்று தருவார். திருவண்ணாமலையில் இருந்துகொண்டே நான் திருவண்ணாமலையைத் தேடுவது. நீ ஆத்மா அல்லது பிரம்மமாகவே இருந்து கொண்டிருக்கிறாய். எனவே விசேஷமான ஆத்ம அனுபவத்திற்கு முயற்சிக்காதே. மாறாக அதற்குத் தடையாக இருக்கின்ற மாயா உபாதியாகிய உடல், மனங்களிலிருந்து உன்னுடைய கவனத்தை மீட்டு எடு என்று கூறுகிறார்.*

*பகவான் ரமணரிடம் ஒரு அன்பர் தம்முடைய ஐயத்தைக் கீழ்க்கண்டவாறு முன்வைத்தார்:*

*'பகவான்! ஆத்ம விசாரணையைக் காட்டிலும் தியானமே நேரான வழியென்று நினைக்கின்றேன். ஏனெனில் தியானத்தில் ஸத்யத்தை நேரே அணுகுகிறோம். விசாரணையிலோ அஸத்யத்தைக் களைவதே முக்கியமாக இருக்கிறது!'*

*பகவானது பதில்:*

*"ஆரம்ப சாதகர்களுக்கு ஏதோ ஒன்றைத் தியானத்தில் என்பது சுலபமாகத் தோன்றும். அவ்வாறு ஏகாக்கிரதை (மன ஒருமுகப்பாடு) ஏற்பட்டவர்களுக்கு விசாரணை சாத்தியமாம். ஆனால் 'ஸத்யம்' இன்னதென்று புரியாமல் அதைத் தியானித்தல் எப்படி? ஸத்யம் இதுதான் என்று புரிந்துகொள்ள அதை மறைத்துக் கொண்டிருக்கும் அநாத்ம தத்துவத்தை விசாரணையால் விலக்கியே தீர வேண்டும். தோன்றி மறையும்*

அகந்தையானது விலக்கப் பெறுங்கால் ஸத்யம் தடையின்றிப் பிரகாசிக்கும். அது இயல்பாகவே தானே தானாய் என்றும் ஒளிர்வது. ஆத்ம அனுபவம் என்பது நம்முடைய இயல்பு நிலை. ஏதோ ஒரு நூதன அனுபவம் அல்ல அது. உலக விஷயத்தில் அனுபவங்கள் பலவும் நூதனமாக அதாவது புதியதாக அனுபவிக்கப் படுகின்றன. ஆனால் ஆத்மா நமக்குப் புதியது அல்ல. அது நம்முடைய இயல்பு.

“இயல்பு நிலையை அறியாததால் அதைப் பற்றிய அனுபவம் என்பது தடைபட்டிருப்பது போலத் தோன்றுகிறது. உபாதிகளோடு சம்பந்தப்படுத்திக் கொண்டு நம்முடைய இயல்பு நிலையைப் பற்றிய தற்கவனமின்மையில் இருக்கிறோம். நான் யார் என்ற விசாரணையானது உபாதிகளை நம்முடைய கவனத்திலிருந்து நீக்கி விடுகிறது. பிறகு இருப்பது ஆத்மாவாகிய நமது யதார்த்த நிலை மட்டுமே.”

ஆக, அநாத்மாவாகிய உடலைப் போட்டோ எடுக்கிறோம். செல்ஃபி எடுக்கிறோம். இதே மனநிலை ஆத்ம விஷயத்திலும் வந்து விடுகிறது.

அதன் விளைவாக ஆத்மாவை ஒரு அனுபவமாக அனுபவிக்க வேண்டும் என்று விழைகிறோம்.

பகவான் ரமணர் கூறுவது:

உன்னை அனுபவம் என்ற வரையறைக்குள் கொண்டுவர முடியாது. காரணம் எல்லா அனுபவங்களும் உன்மீது நடந்து கொண்டிருக்கின்றன. அனுபவங்கள் அனைத்தும் உடல், மன உபாதிகளைச் சார்ந்திருக்கின்றன. ஆத்மாவாகிய நீயோ அவைகளுக்கு ஆதாரமாக விளங்குகிறாய். இவ்விதம் புரிந்து கொள்வதுதான் மோக்ஷம். அதுதான் உண்மையான செல்ஃபி.

# முருகனார் என்னும் முத்தமிழ் ஞானி

**சுந்தர்ராஜன்**

*ஆரே மெய்ஞ்ஞானம் அடைந்தார் முருகனைப்போல்*
*ஆரே ரமணன் அருள்பெற்றார் இங்குஅவர்போல்*
*ஆரே அவர்போல் அடக்கநிலை பூண்டுள்ளார்*
*ஆரே அவரை அறிவார்.*

*திரு. வ.சு.செங்கல்வராய பிள்ளை*

நம் பகவான் அறிந்து கொள்ள முடியாத பரம்பொருள் என்றால், அவரது முதன்மைச் சீடர் முருகனாரும், யாராலும் அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு, மெய்ஞ்ஞானமும், பகவானின் பேரருளும் பெற்ற பெருந்தொண்டர். கூடவே, முருகனாரின் அடக்கமும் யாராலும் நினைத்துப் பார்க்கவே முடியாதது.

பகவான் உடலைவிட்ட பிறகு, நான்கு பக்கங்களிலும், செய்வதறியாது ஓடிப்போன அணுக்கத் தொண்டர்கள், எங்கும் அமைதி கிடைக்காமல், பகவான் வாழ்ந்த இடத்திலேனும் இருப்போம் என்று திருவண்ணாமலை வந்து சேர்ந்தனர். முருகனாரும் தன் தெய்வத்தை இழந்து ஆறாத் துயரில்தான் இருந்தார். அணுக்க அடியார்கள், முருகனாரைப் பார்த்து ஆறுதல் அடைந்தார்கள். முருகனாரைப் பார்க்கும்போது அவர்களின் சோகம் தொலைந்து போனது. பகவானின் அன்பு, அறம், அருள்நெறி, மெய்ஞ்ஞான இன்ப (சச்சிதானந்த) நிறைவு ஆகியவற்றை அப்படியே முருகனாரிடம் கண்டனர். நம் இறைவன் ரமணனின் பெருமைகளைப் பேணிப் பாதுகாக்கிறவர் முருகனார்தான் என்று உணர்ந்து அவரிடம் சென்று,

ஸ்ரீரமண பகவானின் நூல் திரட்டுக்குப் பொருள் கூறுங்கள் என்று வேண்ட, முதன்முதலாக, நூல் திரட்டுக்குப் பொருள் கூறினார்.

முருகனாரிடம் பாடம் கேட்ட ஆனந்தம்மாள் என்ற ரமண பக்தை பாதிப்பாடம் கேட்கும்போதே மயங்கி, அன்று இரவே முக்தி அடைந்தார். முருகனாரிடம் பாடம் கேட்ட மற்றொரு பக்தையான T.R. கனகாம்பாள், பகவான் சந்நிதியிலேயே உடலைவிட்டு முக்தி அடைந்தார். இவ்வாறு முருகனாரின் ரமண பக்தி, ரமண பக்தர்களை, ரமணரில் ஒன்றச் செய்யும் வலிமை படைத்தது. முருகனார் இரக்கம் மிக்கவர். இனிமையாக, இன்சொல்லைச் சொல்வார். சமநோக்குக் கொண்டவர். தன்னைச் சார்ந்தவர்களிடம், உள்ளம் நிறைந்த உண்மையான அன்பு கொண்டவர். தன்னிடம் போதனை கேட்டவர்கள், தன்னைப் புகழவேண்டும், மதிக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணமாட்டார். ஆனால் அவர்களது சாதனையில் முன்னேற்றத்தைக் கண்டு, உள்ளத்தில் மகிழ்ச்சி அடைவார்.

முருகனாரிடம் வந்து, தங்கள் துயரை யாரேனும் சொன்னால், தன் துயரம்போல் எண்ணுவார், துயரம் துடைத்து அருள்வார். ஆனால், கருமங்கள் அனைத்தையும் கழற்றிவிட்டவர் முருகனார்.

முருகனார், பகவானையே நினைத்திருப்பார்; பகவான் புகழையே பேசுவார். பகவானின் திருவடிகளைத் தலையில் அணிந்ததுபோல் திகழ்வார். பிறப்பை அறுக்கும் தவமாக, முருகனார் செய்த நல்ல தவம் இவையே.

ரமண பக்தன் என்றால், அவனுக்குப் பணிவுதான் அழகு; அதைத் தவிர வேறு சிறப்பு எதுவும் இல்லை என்று பக்தர்களுக்கு உணர வைப்பதுபோல், பணிவே ஒரு வடிவம் எடுத்ததுபோல், முருகனார் விளங்குவார்.

இத்தகைய பணிவே, ரமண பக்தர்கள் அனைவரும் அணிய வேண்டிய கவசம்.

ரமண பகவானின் திருவடிகளை மட்டுமே விரும்பும் மெய்யடியவர், எந்தக் குலத்தினராக இருந்தாலும், அவர்களைச் சிரம் தாழ்த்தி வணங்குவார். பகவானை வேண்டாதவர்கள், தேவர்கள் போல ஒளிர்ந்தாலும், அவர்களைத் தீண்டத் தகாதவர்களாக எண்ணுவார்.

முருகனார், தம்மை முழுமையாக பகவானுக்கு அளித்தார். பகவானும் தன்னையே முருகனாருக்குத் தந்தார். அதனால், முருகனார், சாந்த வடிவராய், அருட் செல்வராய்ப் பொலிந்தார். அவர் முன்னால் நின்றாலே, அகந்தை அடங்கி விடும்.

ஞானகுரு ரமணர் அளித்த ஞான அருட்செல்வத்தை அப்படியே தானமாக எல்லோர்க்கும் அருளிய ஞானவள்ளல் முருகனார். அதனால், ரமண மெய் அடியவர்கள் தன்மயமாவார்கள். அவர்களில் மௌனம் பொங்கும். அவர்களின் மனம் மொட்டை அடிக்கப்படும்.

முருகனார், தன்னை முன் காத்துக் கொண்டார். ஆன்ம சகோதரர்களுக்கு நல்ல வழித்துணையாய் இருந்தார். ரமண பரமாச்சாரியாரின் பக்த பரம்பரைக்குத் தந்தையானார். ரமண பகவானின் ஞானப் புத்திரரில் மூத்தவர், முனிவர் முருகனார்.

பகவானின் திருவடிக்கு மட்டுமே முருகனார் கட்டுப்படுவார். துறவிக்கு வேந்தனும் துரும்பு என்னும் பண்பைப் பிறப்பிலேயே செல்வமாகப் பெற்றவர் முருகனார்.

அட்டமாசித்திகளால் ஆண்டவனை அடைய முடியாது என்று தீர்மானமாக உணர்ந்த முருகனார், சித்திகளைச் சிந்திக்காமல், சித்தத்தைச் சித்தாம் ரமணனிடம் மட்டுமே வைத்தவர். அதனால் முருகனாரிடம் அட்டமாசித்தியும் வந்து ஏவல் செய்யும்.

## அனுக்கிரக அழகு

யாரேனும் தன்னிடம் அனுக்கிரகம் வேண்டினால், முருகனார், ஆசி அளித்தல் முதலிய அனுக்கிரக பாவனையைக் கொள்ளமாட்டார். அனுக்கிரகம் செய்கிறேன் என்ற எண்ணம் எழக்கூடாது என்பதற்காக, சும்மா அமர்ந்திருப்பார். அனுக்கிரக எண்ணமின்றி, சித்தாகத் தான் இருத்தலே, அனுக்கிரகம் வேண்டினார்க்குச் செய்யும் உண்மை அனுக்கிரகம் என்பதை அறிந்தவர் முருகனார். தன்னை அண்டினார்க்கு முருகனார் அளிக்கும் அருள் அனுக்கிரகம், தன்னைத் தன்னில் ஒடுக்கிக் கொள்வதுதான். ஆச்சரியப்படத்தக்க இந்த அடக்க இயல்பே, ரமண பகவானை அப்படியே கடைப்பிடிக்கும் முருகனாரின் அரும் பண்பாகும்.

உள்ளத்தில் ஒளிரும் மெய்ப்பதத்தில் மனத்தைத் திருப்பிய முருகனார், வெளியில் செய்யும் வழிபாடு எதுவும் தெரியாதவர்.

முருகனார், 'ரமண சந்நிதி முறை' என்னும் நூலை, 1851 பாடல்களில் இயற்றினார். பகவானாம் மெய்ப்பொருளை அனுபவித்து, ஆனந்தித்து எழுதிய அந்த உயர்ந்த பாடல்களைப் பாடி, ரமண பக்தர்கள் தவத்தில் சிறந்து விளங்குவார்கள்.

பகவானின் வாசகங்களைப் புரிந்துகொள்ளாத, நுண்ணுணர்வு குறைந்தவர்களுக்கு வழிகாட்டியாக, பகவானின் வாசகங்களை, 'குருவாசகக் கோவை' என்னும் பெயரில் தொகுத்து, மக்கள், பந்தத்திலிருந்து விடுதலை அடையச் செய்தார். குருவாசகக் கோவை மொத்தம் 1254 பாடல்களால் ஆனது.

மோன ஒளிமிக்க முனிவர் முருகனார், ரமணானுபூதியை எழுதி, அனுபூதிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தார். 'ரமணானுபூதி' இரண்டு பாகங்களால் ஆனது. முதல் பாகம் 'குரு ரமணப் பிரசாதம்' என்னும்

பெயரில் 1039 பாடல்களாலும், இரண்டாம் பாகம் 757 பாடல்களாலும் ஆனது.

மேலும், 207 பாடல்களால், 'ஸ்ரீரமண தேவ மாலை' என்ற நூலையும், 257 பாடல்களால், 'ஸ்ரீரமண சரணப் பல்லாண்டு' என்ற நூலையும், 17,732 பாடல்களால் 'ஸ்ரீரமண ஞானபோதம்' என்ற ஞானப் பெருநூலையும் முருகனார் இயற்றியுள்ளார்.

## ஸ்ரீரமண ஞானபோதச் சிறப்பு

'ஸ்ரீரமண ஞானபோதம்' ஒரு ஆன்மீகச் சுரங்கம். உலக ஆன்மீகத்தின் எல்லாக் கூறுகளும் இந்திய ஆன்மீகத்திற்குள் அடக்கம். இந்திய ஆன்மீகத்தின் உயர்ந்த வெளிப்பாடு ஸ்ரீரமண பகவானின் வாழ்வும் வாக்கும். பகவானின் நுட்பமான ஆன்மீகக் கருத்துக்களை எளிய தமிழில் எழுதி, தமிழுக்கும் இந்திய ஆன்மீகத்திற்கும் மாபெரும் பெருமை சேர்த்திருக்கிறார் முருகனார். 'ஸ்ரீரமண ஞானபோதம்', பிறநாட்டு மொழிகளில் வெளியிடப்படும்போது அது இந்தியா உலகுக்கு அளிக்கும் அரிய ஆன்மீகக் கொடையாய் அமையும். நம் பகவானின் அரிய அவதாரத்தையும், ஸ்ரீமுருகனாரின் ஆழ்ந்த ஆன்ம உணர்வையும் உலகம் உணர இயலும்.

மொத்தம் 23097 பாடல்களை பகவான் மீது மட்டும் எழுதிய மாபெரும் தெய்வீகக் கவிஞர் முருகனார். இன்னும் விடுபட்டுப் போன பாடல்களையும் சேர்த்தால், மொத்தம் 25,000 பாடல்களை முருகனார் பாடியுள்ளார் என்று சொல்லலாம். தக்ஷிணாமூர்த்தியான நம் பகவான், மோனத்தில் உணர்த்தியதை பல பாக்களால், பேருரையாக, மக்களுக்கு விளங்க வைத்தவர் முருகனார்.

இவ்வாறாக, தூய தமிழ் மாலை தொடுத்து, ரமண நாயகனின் தாளில் நன்றாகச் சூட்டிய முருகனார், வினைகளெல்லாம் அழிந்து, ஆன்ம சொரூபமானார்.

# அக்ஷர மணமாலை – ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

**பகுதி-20**

*பாரதி பல்நோக்குப் பார்வைகொண்ட அற்புதக் கவிஞர். சமகாலப் பிரச்சனைகளோடு, தத்துவம், வேதாந்தம், ஆன்மிகம் போன்றவற்றையும் எளிய கவிதை வடிவில் தந்தவர். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மறைந்த அவருடைய நூறாவது நினைவு நாளைக் கொண்டாடும் வாய்ப்பு இப்பொழுது நமக்குக் கிட்டியிருக்கிறது. இவருக்கும் பகவான் ரமணருக்குமிடையே நிறைய ஒற்றுமைகள் இருப்பதைக் காண முடிகிறது. ஒரே நூற்றாண்டிலேயே இவர்கள் இருவரும் வாழ்ந்தனர் என்பதே ஒரு அடிப்படை ஒற்றுமை. இவரும் ரமணரைப் போலவே 'நான்' என்னும் விஷயத்தைப் பல கோணங்களில் பார்க்கிறார்.*

*அகில உலகமும் நமக்குள்ளே அடங்கி விடுகிறது என்பது நம் தத்துவம். இதை மிக அழகாக பாரதி தன்னுடைய 'நான்' என்னும் பாடலில் விளக்குகிறான்.*

*வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்*
*விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்*
*இன்பத் திரள்கள் அனைத்துமே நான்*
*அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்.*

*அழகான வரிகள். வாழ்வின் உயர்ந்த பொருட்கள் அனைத்திலும் நானே இருக்கிறேன் என்று பறைசாற்றி, அதே சமயத்தில், 'மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்' என்று தன்னையே தாழ்த்திக் கொள்ளும் பாங்கினையும் காண முடிகிறது. கண்ணன் பகவத்*

கீதையின் பத்தாவது அத்தியாயத்தில் தன்னை உலகில் எந்தெந்த விதத்திலே காண முடியும் என்று விளக்குகிறான்.

*வேதங்களில் நான் சாம வேதம், சிகரங்களில் மேரு, சேனாதிபதிகளில் ஸ்கந்தன், ஆயுதம் தரித்தோரில் ராமன், மாதங்களில் மார்கழி*

என்று உலகில் உள்ள அனைத்துத் துறைகளிலும் தன்னை சிறந்தவனாக வெளிக்காட்டும் கண்ணன், (த்³யூதம் சலயதாம் அஸ்மி என்னும் வரிகளில்) வஞ்சிப்பவர்களின் சூதாட்டமாகவும் தன்னைக் குறிப்பிடுகிறான். இந்த 'விபூதி யோகத்தின்' வேறு ஒரு பரிமாணமாக பகவத்கீதையின் அடிச்சுவட்டில் தடம் பதிக்கிறான் பாரதி என்பதைக் காண முடிகிறது.

இந்த 'நான்' என்னும் அற்புதமான பாடலின் முத்தாய்ப்பு வரிகள், நமக்கு ஒரு வேதாந்த சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

*நான் எனும் பொய்யை நடத்துவோன் நான்*

இந்த வரிகள், அத்வைதத்தின் மாயை என்னும் கோட்பாட்டின் பிரதிபலிப்பு என்று கொள்ளலாம். ஆரம்பத்தில் 'அண்டமெல்லாம் பரவியிருக்கும் சக்தி நானே' என்று சொல்லும் அந்த சாத்வீக அகங்கார வெளிப்பாடின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்கிறார். இந்த ஜெகத் எனப்படும் அத்தனை படைப்பும் பொய்யானது என்பதே சங்கர பகவத் பாதர் முன்வைத்த தத்துவம். 'பிரம்மம் சத்யம்; ஜகத் மித்யா' என்ற வாதத்தை பாரதி இங்கு விளக்குகிறார். நான் என்பது பொய் என்பது, சங்கரரின் 'ஜகத் மித்யா' என்ற கருத்தின் தெளிவே ஆகும். இதன் முன் வரிகளில் எவ்வாறெல்லாம் இந்த நான் என்பது வியாபித்து கிடக்கிறது என்பதைக் கண்டோம். அவை அனைத்தும் பொய் என்று இந்த முத்தாய்ப்பு வரியிலே பார்க்கிறோம்.

இந்தப் பாடலின் கடைசி வரிகளில்' பிரம்மம் சத்யம்' என்பதும் காண முடிகிறது.

ஞானச்சுடர் வானில் செல்லுவோன் நான்
ஆனா பொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்கு முதற் சோதி நான்

இந்த வரிகளில் பிரம்ம ஞானமே உயர்ந்தது. மற்றவை எல்லாம் இந்தப் பொய்யான உலகத்தில் நாம் காண்பதாக நினைப்பது— என்னும் அரிய அத்வைதக் கருத்தை, மிக எளிய வரிகளில் நமக்குத் தந்துவிட்டார் பாரதி என்னும் அந்த வேதாந்தி.

இந்த நிலையை அடைந்தவர்க்கு மரணம் –அதன்பின் ஜனனம்–மறுபடியும் மரணம்–என்னும் இந்த மானுடச் சங்கிலித்தொடர் அற்றுப்போகிறது. இதை அந்த முண்டாசுக் கவிஞர், 'அத்வைத நிலை கண்டால் மரணம் உண்டோ?' வரிகளில் நிலைநிறுத்துகிறான். இந்த அத்வைத நிலையை அடைய சில குறைகளை நீக்க வலியுறுத்தி. 'நாணத்தை, கவலையினை சினத்தை, பொய்யை, அச்சத்தை வேட்கைதனை அழித்துவிட்டால், அப்போது சாவுமங்கே அழிந்து போகும்' என்று இந்த வரிசையில் ரஜஸ், தமஸ் என்னும் குணங்களின் ஒழித்தலை முன்வைத்து அவன் முடிக்கிறான், 'மிச்சத்தைப் பின் சொல்வேன்' என்ற வரியில். இவ்வாறு எதிர்மறை எண்ணங்களை ஒழிப்பது ஆன்மீகப் பாதையின் முதற்படியாகும். பின்பு நேர்மறை குணங்களை வளர்த்துக் கொள்வது சுலபம். அதைத்தான் கவிஞன் 'மரணத்தை வெல்லும் வழி' என்னும் இந்த வரிகளில் குறிப்பிடுகிறான்.

இவ்வாறு எதிர்மறை எண்ணங்கள் ஒழிந்த நிலையில் 'ஞான விசாரம்' என்னும் இரண்டாம் கட்டத்தை நோக்கிச் சாதகன் நகர்கிறான். அதை ஒரு அழகிய கனவாக இலக்கியமும் சித்தாந்தமும் கலந்த கவிதை வடிவாக பாரதி படைக்கிறான். (தலைப்பு 'அழகுத்

*தெய்வம்') மங்கிய நிலவொளியில் வருகிறாள் அந்த 16 வயது நிரம்பிய இளமங்கை. முழு நிலவு போன்ற முகம், புன்னகை பூத்த மின்னல் போன்ற ஒளிபடைத்த மேனி. இந்த அழகு தெய்வம் அவன் முன் வந்து நிற்கிறது. அந்த சிருங்காரச் சூழலிலே, அங்கு நிகழ்வது என்னவோ ஒரு தத்துவ சரசம். அந்த விசாரத்தின் சில பகுதிகளைப் பார்க்கலாமா?*

*கேள்வி: யோகம் சிறந்ததா? தவம் சிறந்ததா?*

*பதில்: யோகமே தவம்; தவமே யோகம்*

*கேள்வி : அது, ஒன்றானதா, அல்லது இரண்டா?*

*பதில்: இரண்டுமாம், ஒன்றுமாம், யாவுமாம்*

*கேள்வி: காலத்தின் விதி மதியைக் கடக்குமோ?*

*பதில்: காலமே மதிக்கு ஓர் கருவியாம்*

*கேள்வி: விரும்பியது கிட்டுமோ*

*பதில்: நாலில் ஒன்றிரண்டு பலித்திடலாம்*

*இவ்வாறு தொடர்கிறது இந்த ஞான வேட்கை இதில் கேள்வி பதில் இரண்டுமே ரத்தினச் சுருக்கமாக அமைந்திருக்கின்றன. இன்னொரு அம்சத்தையும் இங்கு நோக்கலாம். அந்த அழகிய ஞானப் பெண், அளிக்கும் பதில்கள் எல்லாமே 'இதுதான் விடை' என்ற முறையிலே அமையாமல், வினா தொடுப்பவரை மேலும் மேலும் சிந்திக்க வைக்கின்றன. வேதாந்த விசாரம் என்பது இந்த முறையிலே தான் அமைந்திருக்கும். கேள்வி கேட்பவர் தன்னுடைய அனுபவத்தால் அந்த பதிலின் முழுக் கருத்தை தன் வயப்படுத்திக் கொள்ள வேண்டும். குரு என்பவர் ஒரு வழிகாட்டியாக, மார்கதர்சியாக மட்டுமே இருப்பார். சிஷ்யன் தன் முயற்சியாலேயே ஞானத்தைப் பெறமுடியும். இந்தப் பாடலை முதன் முறை படிக்கும் பொழுது முழுமையாக இதன் பொருள் விளங்காமல்*

*போகலாம். அனுபவம் கூடக் கூட, இந்த விவாதத்தின் தத்துவ ஆழம் நம்மைப் பரவசப்படுத்தும். இப்பொழுது இந்த பாடலின் கடைசிப் பகுதிக்கு வருவோம்*

*கேள்வி: 'மூலத்தைச் சொல்லவோ? வேண்டாமோ?'*

*பதில்: அந்த ஞானப் பெண் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவள் என்ன செய்தாள்? பாரதியின் வாக்கில் பார்ப்போம்.*

*'முகத்தில் அருள் காட்டினாள், மோகமது தீர்ந்தேன்'*

*இந்த இறுதி உபதேசம், வாய்ச் சொல்லாக வருவதில்லை. அருள் வடிவான, உயர்ந்த ஒரு பரம்பொருள் பக்குவமடைந்த ஒரு சிஷ்யனுக்கு அளிக்கும் மௌன உபதேசமே அது. இந்த அருள் வடிவிலேயே ரமண பகவான்–பால் பிரண்டனுக்கும், ராமகிருஷ்ணர்–விவேகானந்தருக்கும், இன்னும் காலப்போக்கில் பின்னோக்கிச் சென்றால், முருகன்–ஔவைக்கும், தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில் வந்த பரம்பொருள்–சிஷ்யர்களுக்கும் மெய்ப்பொருளை உணர்த்தினர்.*

*மேலும், இந்தப் பாடலில் பாரதி ஒரு புதுமையைப் படைத்தான். பொதுவாக ஞான உபதேசம் ஒரு சந்நியாசி அல்லது ஆச்சாரியன் மூலமாகத்தான் நடைபெறுவது வழக்கம். குரு என்பவர் ஒரு முற்றும் துறந்த, ஜடா முடியுடன் கூடிய ஆண்மகன் என்பதுதான் நம்முடைய அனுபவம். இங்கு வந்த ஞானகுரு முற்றிலும் மாறுபட்ட குணத்தோடு இருக்கிறார். அவர் ஆண் அல்ல, வயது முதிர்ந்தவர் அல்ல. அவள் 16 வயது இளம்பெண். அதுவும் பேரழகு படைத்த பெண். இவ்வாறு குரு மாறுபட்ட நிலையில் இருக்கிறார். அதுமட்டுமல்ல, உபதேசம் பெறுவதற்குக் காலை நேரத்தில் பிரம்ம முகூர்த்தத்தில், குருவை நோக்கிச்*

செல்வான் சிஷ்யன். இங்கு குரு சிஷ்யனின் கனவில் வருகிறார். அதுவும் இரவு நேரத்தில்!!

ஏன் இத்தனை முரண்பாடுகள்?

இங்குதான் பாரதியின் எளிமையான தத்துவ விசாரத்தைக் காண்கிறோம். இருபதாம் நூற்றாண்டுக் கவிஞராகிய அவருக்கு நம்முடைய நிலைமை நன்றாகத் தெரியும். தபோவனமும் குருகுலமும் இக்காலத்தில் சாத்தியமில்லை. குரு என்பவர் சாமானியரிடமிருந்து மாறுபட்டு உள்ளவரல்ல. அதனால்தான் குருவை இளம் பெண்ணாகப் படைத்தான். உபதேசத்தை எளிமைப் படுத்தினான். ஆனால் தத்துவத்தை உணர்த்திவிட்டான்.

இத்தகைய ஞானம் பெற்ற ஒருவன் எந்த முறையில் இருப்பான் என்பதையும் பாரதி தன்னுடைய ‘தெளிவு’ என்னும் பாடலில் விளக்குகிறார். அவற்றில் சில முக்கியமான வரிகளைப் பார்ப்போம்.

*1 எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின் ஏழைமை உண்டோடா?*

*2 பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின் புத்தி மயக்கம் உண்டோ?*

*3 உள்ளமெல்லாமோர் உயிரென்று தேர்ந்தபின் உள்ளம் குலைவதுண்டோ?*

*4 வெள்ளமெனப் பொழி தண்ணருள் ஆழ்ந்தபின் வேதனை உண்டோ?*

*5 எத்தனை கோடி இடர் வந்து சூழினும் எண்ணம் சிறிது முண்டோ?*

*6 பொய் கருதாம லதன் வழி நிற்பவர் பூதல மஞ்சுவரோ?*

எளிய சொற்களில் தத்துவ விளக்கம். இதற்கு ஒரு முத்தாய்ப்பு வடிவமாகக் கவிதையை முடிக்கிறான்

நம் பாரதி, 'ஆன்ம ஒளி கடல் மூழ்கித் திளைப்பவற்கு அச்சமுண்டோ? மனமே தேன்மடை இங்குத் திறந்தது கண்டு தேக்கித் திரிவமடா'. இதுதான் உண்மையான விசாரத்தின் பயன். அந்த ஞான விசாரத்தில் உண்மையை கண்டவனுக்கு ஏழ்மையும் வேதனையும் அச்சமும் ஏற்படுவதில்லை. உள்ளூரப் பீறிட்டுப் பொங்கும் அந்த ஞான வெள்ளத்தில் அவன் மூழ்கிப் பெருமகிழ்ச்சி அடைகிறான்.

இந்த ஞான விசாரமே நம்முடைய வேதாந்தத்தின் அடிப்படை. உபநிஷதங்களில் இதைப் பல இடங்களிலும் பார்க்கிறோம். பாலகனான நசிகேதஸ், மக்கள் அனைவரும் கண்டு அஞ்சும் எமதர்மன் வீட்டிற்கே சென்று ஆழ்ந்த தத்துவ விளக்கத்தைப் பெருகிறான். அவன் மனதை மாற்ற எமன் பலவிதமான உலகியல் ஆசைகளெல்லாம் ஊட்டுகிறான். அவை எதுவும் இந்தச் சிறுவனிடம் எடுபடுவதில்லை. இது, தத்துவ உலகில் ஒரு மாபெரும் நிகழ்வு என்று போற்றப்படுகிறது. அது மட்டுமல்ல. ஆணாதிக்கம் உலகெங்கும் பரவிக் கிடந்த அந்தக் காலகட்டத்தில், மைத்ரேயி என்னும் பெண், அறிவிற் சிறந்த தன்னுடைய கணவராகிய யாக்ஞ்யவல்கரிடம் போற்றத் தகுந்த ஒரு வேதாந்த விசாரத்தை நடத்துகிறாள். இது உலகளாவிய தத்துவ விவாதங்களில் ஒரு பெரும் புரட்சியாக அமைகிறது. இதேபோன்று தைத்திரீய உபநிஷத்தில் ப்ருகு என்னும் சிறுவனின் ஞானப் பயணத்தை அனுபவிக்கிறோம். சாந்தோக்கிய உபநிடதம் முழுவதுமே, சுவையான பல தத்துவ விவாதங்களை அளிக்கிறது. இந்த முறையில் பகவத் கீதை ஒரு மலையில் இட்ட தீபம் போல அறிவு ஒளி தருகிறது. குரு சிஷ்ய விவாதமாக இல்லாமல், இரண்டு நண்பர்களுக்கு இடையே அமைந்த சுவையான ஒரு விசாரம் இதுவாகும். நிஷ்காம்ய கர்ம யோகம் என்ற,

பாரினில் எங்குமே காணக்கிடைக்காத அற்புதமான சித்தாந்தம் இங்குதான் நமக்கு கிடைக்கிறது.

இதிகாசங்களான *ராமாயணம், மகாபாரதம்* போன்ற நூல்களிலும் தத்துவ விசாரம் விரவிக் கிடக்கிறது. சாருவாக தத்துவ நோக்கில், ஜாபாலி என்னும் ரிஷி, ராமனிடம் விவாதிக்கிறார். வாலியோ, 'ராமா, தர்மத்தின் அடிப்படையில் நீ நடக்க தவறிவிட்டாய்' என்று விவாதிக்கிறான். அயோத்தியா காண்டம் முழுவதுமே தர்ம விசாரம்தான். இதேபோல மகாபாரதத்திலும் பலவித உபதேசங்களைக் காண்கிறோம். கீதையைப் பற்றி மேலே விவாதித்தோம். அதேபோல் விதுர நீதி, சநத்சுஜாதியம், யக்ஷப்ரஸ்னம் போன்ற பல உயர்ந்த நீதி விசாரங்களைப் பார்க்கிறோம்.

இந்த முறை இந்திய இலக்கியங்களில் தொடர்ந்து வருவதைப் பார்க்கிறோம். சங்கரர் வாழ்க்கையில் பல இடங்களிலும் விவாதங்கள் நடைபெறுகின்றன. சைவத் திருமுறைகள், வைணவக் கிரந்தங்கள் மற்றும் பல நூல்களிலும் இந்த தத்துவ விசாரம் என்னும் அமைப்பு விரவி வருகிறது.

இந்த விசாரம் நூலறிவினால் மட்டும் கிட்டுவதில்லை என்பதும் நம் முன்னோர் கண்ட உண்மை. இதற்கு சாந்தோக்கிய உபநிடதத்தின் ஏழாவது அத்தியாயத்தில் ஒரு அழகான விளக்கம் காணப்படுகிறது. அறிவில் சிறந்த நாரதர், சனத்குமாரர் என்னும் ஞானியை அணுகி 'பூமா' வித்தையைக் கற்றுத் தருமாறு வேண்டுகிறார். இதுவரை தான் கற்ற நூல்களின் வரிசையையும் நாரதர் தெரிவிக்கிறார். 'நான் நால்வகை வேதம், இதிகாச புராணம், மந்திரங்கள் இலக்கணம் காவியம் அலங்காரம், வான–நாட்டிய–சங்கீத சாஸ்திரங்கள் போன்ற அனைத்தையும் அறிவேன். ஆயினும் ஆத்ம ஞானத்தை அடைய முடியவில்லை' என்று வேண்டுகிறார்.

*அதற்கு பரதத்துவத்தை நன்கு உணர்ந்த சனத்குமாரர், 'நீவிர் கற்றதெல்லாம் பெயரளவில்தான்' என்று தெளிவுபடுத்தி மெய்ப்பொருளை செவ்வனே விளக்குகிறார். இந்த முறையில் பூரண ஞானம் என்பது பாண்டித்தியத்தினால் மட்டும் அடையக்கூடியது அன்று என்ற கருத்தும் தெளிவாகிறது. ஒரு தகுதி வாய்ந்த சான்றோனாகிய குருவின் அருளால் மட்டுமே ஞானம் நாரதருக்கு கிடைக்கிறது. இவ்வாறு குரு–சிஷ்ய உபதேசமாக அமையாமல், வேறு விதங்களிலும் ஞானம் பெற்றவர் உண்டு. தேவாரம் பாடிய சம்பந்தருக்கு ஞானப் பால் மூலமாகவும், நாவுக்கரசருக்கு வயிற்று நோய் மூலமாகவும், சுந்தரருக்கு திருமண காலத்தில் ஒரு வழக்கு மூலமாகவும் ஞானம் கிடைக்கிறது. அவர்கள் இந்தப் விசாத்திற்கு ஏற்ற பக்குவம் உடையவர்கள் என்ற காரணத்தால், இறைவன் எளிவந்து அருள் பாலிக்கிறான்.*

*இந்த நிலை இக்காலத்தில் நமக்குக் கிட்டுமா என்ற ஐயப்பாடு எழுகிறது. நல்ல குருவைப் பெறுவது எளிது அல்ல. நம்முடைய கரும பலனும் அத்துணை அளவு இறை அருளை ஈர்க்கும் சக்தி படைத்ததாகத் தோன்றவில்லை. நமக்கு இந்த நிலையில் என்ன வழி இருக்கிறது?*

*இதற்கு ரமணர் காட்டிய பாதைதான் தலைசிறந்தது. 70 ஆண்டுகளுக்கு முன் சமாதி அடைந்த பகவான் நம்முடைய குறைபாடுகளையும் மனத்தின் போக்கையும் நன்கு அறிந்தவர். அவசர கதியில் இயங்கும் நம் போன்றவர்களுக்கு ஞான விசாரத்தின் வழிகளை சுலபமாக்கி கொடுத்தவர். 'நான் யார்?' என்பது அவர் நமக்கு அளித்த மிகப் பெரிய வரப்பிரசாதம். இது எளிதான ஒரு பயிற்சிமுறை இல்லை என்பதையும் பகவான் அறிந்திருந்தார். இந்த மார்க்கத்தை எளிமைப் படுத்தவே அவர், 'அக்ஷரமணமாலை' என்னும்*

*சுலபமான ஒரு பாதையைக் காட்டினார். இதில் உள்ள 108 பாடல்கள் மூலம் பக்தி என்னும் தேனில் ஊறிய பலாச் சுளைகளாக ஞானத்தை நமக்கு அள்ளிக் கொடுத்தார் ரிஷியாகிய அந்த பகவான்.*

*'நான் எளியவன். பக்தி–கர்ம–ஞான மார்க்கங்களை அறியாதவன். இறை அனுபவம் கிடைக்கப்பெறாதவன்' என்னும் அடித்தளத்தில் இருக்கும் ஒரு சாமான்யமான ஜீவனின் நிலையிலிருந்து விசாரத்தைத் துவக்குகிறார் பகவான். இறைவன் சில கண்ணாமூச்சி விளையாட்டுகளை நிகழ்த்திக் காட்டுகிறான். 'இதோ, எனக்கு அவன் அருள் எட்டிவிட்டது' என்று நினைக்கும் பொழுது, திடீரென்று விலகிப் போகிறான். இறுதியில் நம் மனதை அவன்பால் நிலைநிறுத்த உதவி புரிகிறான். இந்த ஏற்ற இறக்கம் நிறைந்த ஞான விசாரம், நடைமுறை வாழ்க்கையில் பலரும் பார்க்கக்கூடிய ஒரு அனுபவமாகும்.*

*இறைவன் அருள் கைவரப் பெறாத ஒரு அடியவன், அவன் அருளைப் பெற மிகவும் ஆசைப்படுகிறான். ஆண்டவனைக் குறித்து தத்துவ விசாரம் செய்ய போதிய பக்குவமும் வைராக்கியமும் அவனிடம் இல்லை. 'என் மனம் மிகவும் தளர்ந்து விட்டது. உன்னை அடைய எனக்கு எந்தவித தகுதியும் இல்லை. ஆயினும் இந்தஞான விசாரத்தை மேற்கொள்ளும் தகுதியை எனக்கு தந்து அருள்வாயாக.' என்று இறைஞ்சி வேண்டுகிறான்*

***ஞானம் இல்லாது உன் ஆசையால் தளர்வு அற***
***ஞானம் தெரித்தருள் அருணாசலா (மணமாலை– 40)***

*இது குறித்து மேலும் மேலும் ஆராய்ச்சி செய்கிறான். இது அவன் அந்தரங்கமாக பிறர் அறியாத வண்ணம் செய்யும் ஒரு தவம். இது வெற்றிகரமாக செய்யப்படும் நிலையில் அவன் 'ஸ்வராட்' எனப்படும் உயரிய சமாதி நிலையை அடைகிறான். ஆனால் நம்முடைய*

*இந்த சாதாரண ஜீவன் தன்னைத் தானே கடைந்து கண்டுகொள்ளும் உண்மை சற்று துயரத்தை அளிக்கிறது. 'இந்தப் பிறவி எடுத்து என்ன பயன்? இதைப்போல ஒரு கேடான நிலை வேறு எவருக்கும் கிடைக்காது. என் செய்வேன் அருணாசலா?' என்று மனம் உருகி பிரார்த்திக்கிறான்*

**துப்பறிவு இல்லா இப்பிறப்பு என் பயன்**
**ஒப்பிட வாய் ஏன் அருணாசலா (அக்ஷரமணிமாலை–46)**

இவ்வாறு 'துப்பறிந்து' தன்னைத் தகுதியற்றவன் என்று உணர்ந்து கொள்ளும் நிலையை, 'பரதந்த்ரன்' என்று சித்தாந்தத்தில் விளக்குவார்கள். இந்த நான் என்னும் அகங்கார நிலை நீங்கியவுடன், நமக்கு ஞான விசாரத்திற்கான தகுதி கிட்டிவிடுகிறது. இந்த நிலை நமக்கு கிடைக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், பகவான் நம்மை படிப்படியாக இந்த ஆன்மீகப் பயணத்தில் கொண்டு சேர்க்கிறார். இவ்வாறு இந்த ஞானகிரியில் ஏறத்துவங்கிய நம்மை *உபதேச உந்தியார், உள்ளது நாற்பது* போன்ற நூல்களில் வேதாந்த விசாரத்தின் மற்றைய உயரங்களுக்கு அழைத்துச் செல்கிறார் பகவான்.

இந்த ஞான விசாரமே உய்வுக்கு வழி. இதை நமக்கு அறிவுறுத்திய ரமணருக்கும், அந்த ஞான மார்க்கத்தில் சதா கிரிவலம் செல்லும் அன்பர் அனைவருக்கும் என் பணிவான நமஸ்காரங்கள்.

(இந்தத் தொடர் இந்தப் பகுதியுடன் முடிவடைகிறது. இதைப் படித்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு இதைத் தொடர்ந்து எழுத எனக்கு ஊக்கமளித்த ரமணரின் அடியார்களுக்கும், ரமணோதயம் பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளருக்கும் என் நன்றி.)

**(முற்றும்)**

# தலைவனின் தன்மை என்ன என்பார்க்கு......

## சுந்தரம் அண்ணா ஓர் நினைவாஞ்சலி

ஆகுரா

1934-ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதி கீழப்பசலை கிராமத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் முன்னாள் தலைவர் திரு வெங்கட்ராமன் என்னும் வெங்குட்டு அவர்களுக்கும் அவரது துணைவியார் திருமதி நாகலட்சுமி அம்மையாருக்கும் முதல் ஆண் மகவு பிறந்தது.

அம் மகவுக்குப் பெயர் வைக்க வேண்டி, குழந்தையின் தாத்தாவாகிய பகவான் ரமணரிடம் குழந்தையைத் திருவண்ணாமலைக்குக் கொண்டு சென்றனர். பகவானின் மடியில் குழந்தை தவழ, தற்செயலாக ஹாலுக்குள் நுழைந்து கொண்டிருந்த அடக்கத்திற்குப் பெயர்போன பக்தர் சுந்தர ஆர்யா அவர்கள் பகவானின் பார்வையில் பட்டார்.

சுந்தர ஆர்யாவின் பெயரையே சூட்டலாமே என்று பகவான் விளம்ப, 'சுந்தர ரமணன்' எனப் பெயரிடப்பட்டார். பகவானின் தீர்க்க தரிசனம் பொய்க்குமா? [நம் பகவானின் தந்தையார் பெயரும் சுந்தரம் ஐயர் என்பது அன்பர்கள் யாவரும் அறிந்ததே!]

பிற்காலத்தில் திரு. சுந்தர ரமணன் அவர்கள் அந்த சுந்தர ஆர்யாவைப் போன்றே அமைதியுடன் கூடிய அடக்கமே உருவானவராக விளங்கினார். இப்படிப் பிறந்தவுடனேயே பகவானின் அருள் பெற்ற இவர், தனது இறுதியிலும் பகவானின் அருள் பெற்றார்

என்பது பகவானின் அருட்பார்வையாலேயே வாழ்நாள் முழுமையும் வாழ்ந்துள்ளார் என்பதற்கு அத்தாட்சி.

சுந்தரம் அண்ணா என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர் இறுதிநாட்களில் மிகவும் நோய்வாய்ப்பட்டு மரணத்தின் பிடியில் இருந்தபோது அருகில் இவரது பிள்ளைகள் யாருமே இருக்கமுடியவில்லை. இவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். இரண்டாவது மகன் ரவி அவர்கள் அமெரிக்காவில் தனது இளம்வயதிலேயே ரமண பதம் அடைந்துவிட்டார். மூத்தவரும், அடுத்து பகவானின் உயில்படி ஆஸ்ரமத் தலைவராக பதவி ஏற்கவேண்டியவருமான டாக்டர் வெங்கட் S. ரமணன் (ஆனந்த்) அவர்களும், அவரது சகோதரி டாக்டர் அருணா அவர்களும் அமெரிக்காவில் இருந்தனர். கொரானா தொற்றுப் பரவலின் கட்டுப்பாடுகள் நிலவியதால் இந்தியா வரமுடியவில்லை. பகவானின் பணியில் தூய தொண்டு வாழ்க்கை வாழ்ந்த சுந்தரம் அண்ணாவிற்கு இந்த நிலைமையா?

ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்
இதுவோ உனதருள் அருணாசலா

என்று ரமண உலகம் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் கலங்கிய நிலையில், தெய்வாதீனமாக பிழைத்துக்கொண்டார். சிலநாட்களில் மூத்த மகன் டாக்டர் ஆனந்த் அவர்கள் பல தடைகளைக் கடந்து இந்தியா வந்து சேர்ந்தார். தந்தையிடம் இருந்து தலைமைப் பொறுப்பை தனது சிறியதந்தைகள், தாய் ஆசிர்வதிக்க ஸ்ரீ ரமணாஸ்ரம அறங்காவலர்களின் துணையுடன் ஏற்றார்.

அதன் பின்னரே சுந்தரம் அண்ணாவின் உயிர் உடலை விட்டு 21-7-2020 அன்று காலை அவரது அருமை மகள் டாக்டர் அருணா இல்லத்தில் பகவானின் பதத்தில் ஒடுங்கியது.

*தொடர் ஓட்டப் பந்தயத்தில் ஒரு வீரர் மூச்சிரைக்க ஓடி கடும் எத்தனிப்புடன் அடுத்த வீரரிடம் இலக்கை ஒப்படைப்பார். அதுபோன்று ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தலைமைப் பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்கும் கடமையினின்று வழுவா வண்ணம், உயிர் மூச்சை விடாது, தனது மூத்தமகனிடம் பொறுப்பை ஒப்படைத்தார். இது பகவானின் அருளே என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.*

*முப்பதிற்கும் மேற்பட்ட வழக்குகள். 42 ஆண்டுகள் சோதனை நிறைந்த அக் காலக்கட்டத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தலைமையை ஏற்று அனைத்துத் தடைகளையும் பகவான் அருளால் ஓர் மறவனின் துணிவோடு, அன்பர்கள் மற்றும் எதிரிகள் என்று அனைவரையும் சமநோக்குடன் அரவணைத்தவண்ணம் வெற்றி கண்டவர் 'வெங்குட்டு' என்று அன்போடு அழைக்கப்பட்ட திரு வெங்கட்ராமன் அவர்கள்.*

*அவர் இட்ட அடித்தளத்தின் மேல், 25 ஆண்டுகள் அவருக்குப்பின் தலைமை ஏற்றுப் பணியாற்றிய சுந்தரம் அண்ணா அவர்களின் காலம் பொற்காலம் எனலாம்.*

*தடைகள் தகர்ந்து நிர்வாகம் பகவானின் உயிலின்படி ஸ்திரத்தன்மை பெற்றது. அன்பர்களின் ஆதரவும், ஆஸ்ரமத்தின் வளர்ச்சியும் மடை திறந்தால் பாயும் வெள்ளம்போல் பொங்கிப் பெருகலுற்றது. சுந்தரம் அண்ணாவின் காலத்தே நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் பட்டியலிட்டு மாளாது. ஆஸ்ரமத்தில் அமைதி நிலவிய பொற்காலம். ஆஸ்ரமத்தின் கட்டுமானப் பணிகளாக ரமண அன்பர்களின் பெரும் பங்காற்றலுடன் நிறுவப்பட்ட உலகத்தரம் வாய்ந்த ரமண அரும்பொருள் காப்பகம், புதிய நூலகம், விரிவாக்கப்பட்ட உணவுக்கூடம், பக்தர்கள் தங்க புதிய நவீன விடுதிகள் என்பதாக நீட்டிக்கொண்டே போகலாம். ஆஸ்ரமத்தின் வளர்ச்சி என்பதாக மட்டுமல்லாமல்*

பகவான் வாழ்க்கையோடு ஒட்டிய ஸ்தலங்களில் திருச்சுழியில் சிவன் கோவில், பகவான் பிறந்த வீடு, வாசித்த பள்ளி, அங்குப் பொதுமக்கள் வளர்ச்சிக்காக நூலகம், தொழிற்பயிற்சியகம் என்பதாகவும், மற்றும் முருகனாரின் பிறந்த இடமான ராமநாதபுரத்தில் முருகனார் மந்திரம், சிவப்பிரகாசம் பிள்ளை பிறப்பிடத்தில் சிதம்பரம் அருகே மணிமண்டபம், அறையணிநல்லூர் திருக்கோயில் புணருத்தாரணம் மற்றும் குடமுழுக்கு, மடம் கிராமத்தில் மஸ்தான் அவர்களின் சமாதி திருக்கோயில், முருகனார் குறிப்பிட்டுப் பாடிய 'சென்னை ரமணாஸ்ரமம்' (ரமண சந்நிதிமுறையில் உள்ளது) என்பதே போன்று உருவாக்கிய சென்னை ரமணாலயம், பாலக்காட்டில் 'விக்ஞான ரமணீய ஆஸ்ரமம்' என்பதாக வளர்ச்சிகள் திருவண்ணாமலை மட்டுமல்லாது வெளியிடங்களிலும் பெருகின.

திருவண்ணாமலையில் ஆஸ்ரமத்திற்கு வெளியில் அன்பர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப பவழக்குன்று, ஆதி காமாட்சி அம்மன் கோவில், ஆயிரங்கால் மண்டபம் கட்டிடங்கள், அடி அண்ணாமலை திருக்கோயில் என்பதாகக் கட்டுமானப் புதிப்பித்தலுடன், குடமுழுக்கும் சிறப்புடன் நடந்தேறின.

நாராயண சேவை அன்னதானம் என்பது பல்கிப் பெருகியது. திருவண்ணாமலை மற்றும் அன்றி கேரளாவில் பாலக்காடு, சென்னை குரோம்பேட்டை ரமணாலயம், ராமநாதபுரம் முருகனார் மந்திரம் என்று பல இடங்களில் அன்னதான சேவை நீட்டிக்கப் பட்டது.

பல்வேறு ஸ்தலங்களில் குடமுழுக்கு மற்றும் ஆஸ்ரமத்தில் மட்டுமே மூன்று கும்பாபிஷேகங்கள் என நடைபெற்றன. ரமண மணம் பார் எங்கும்

பல்கிப் பெருக, ரமணரின் அருணைவிஜய நூற்றாண்டு வைபவம் சிறப்புடன் நடைபெற்றது.

125-ஆவது ஸ்ரீ ரமண ஜெயந்தி விழாவை ஒட்டித் தென்னகம் முழுவதும் சென்ற ரமண ரத யாத்திரை, கோடிக்கணக்கான அன்பர்களின் பங்கேற்புடன் விழாக்கோலம் பூண்டது. அதன்மூலம் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் ஓர் இயக்கமாக வளர்ந்து அநேகரைச் சென்றடைந்தது. பகவானின் வானோங்கிய புகழை, அவரது உபதேச மொழிகளை உலகெங்கும் பரப்பும் வகையில் பன்மொழிப் புத்தக வெளியீடுகள் வெளிவந்தன. ஆஸ்ரமத்தின் அநேக அலுவல்கள் கணினிமயமாக்கப் பட்டன. இத்தகைய மாபெரும் நிகழ்வுகளில் எதை விட்டோம் என்பதை சிந்திக்கக் கூட முடியவில்லை.

இத்துணை வளர்ச்சிகள் அனைத்தையும் பகவான் அன்பர்களின் வாயிலாக சுந்தரம் அண்ணா அவர்களின் தலைமையில் நடத்தி வைத்தார். சுந்தரம் அண்ணாவிற்கு அவர் செய்தார் என்று கூறுவது என்றும் பிடிக்காத ஒன்று. எல்லாம் பகவான்தான் செய்தது என்று கூறுவார்.

ஆஸ்ரமத்தின் நிர்வாகியாக பகவானால், பகவான் தொண்டர்களின் விருப்பத்திற்கேற்ப அமர்த்தப்பட்ட பகவானின் சகோதரர் நிரஞ்சனானந்தர் இறுதி மூச்சில் பின்வரும் சந்ததியர்க்கு விட்டுச் சென்ற வார்த்தைகள் ....

> “நான் இதய சுத்தியுடனும் கைசுத்தியுடனும் உங்களையெல்லாம் விட்டுப் பிரிகிறேன். சொந்த நலனுக்காக ஆசிரம சொத்திலிருந்து ஒரு பைசா கூட உபயோகித்தவனல்ல. இங்குள்ள உடைமைகள் யாவும் ஸ்ரீ பகவானுடையவை. சிரத்தையுடனும், விழிப்புடனும் பாதுகாக்கப்பட வேண்டியவை. இறைவன் பணியில்

மனப்பூர்வமாய் ஈடுபடுங்கள். ஆண்டவனின் அருள் உங்களுக்கு நிச்சயம் உண்டு. நேர்மையும் நாணயமுமே பரமபூஷணமாக இருத்தல் வேண்டும். இவ் ஆசிரமத்தை நடத்துவதில் நமது புனித சம்பிரதாயங்களை நிலைநிறுத்துங்கள். எனது வாழ்நாள் முழுவதும் நான் இவ்விதமே செயல்பட்டு வந்துள்ளேன் ....”

அவர் விட்டுச்சென்ற அடிச்சுவட்டில் 42 ஆண்டுகள் தலைவராக இருந்த வெங்குட்டு அவர்கள் கதர் உடையும் கைப்பையுமாக சாதித்தார் என்றால், 25 ஆண்டுகள் தலைவராக இருந்த அவர் தனயன் சுந்தரம் அண்ணா பக்தர்களின் பந்தியில் நெய் பரிமாறிக்கொண்டும், காலை முதல் மாலைவரை அனைத்துப் பாராயணங்களிலும் கலந்து கொண்டும் அனைத்தையும் சாதித்துக்கொண்டார் என்பது மிகை அல்ல.

சுந்தரம் அண்ணா மற்றும் அவர் சகோதர்கள் கணேசன் அண்ணா, மற்றும் மணி அண்ணா அவர்கள் மிகவும் எளிமையான மத்திய தர வகுப்பினர்களாகத் தான் வாழ்ந்து காட்டினார்கள், இன்றும் வாழ்ந்து காட்டுகிறார்கள்.

சுந்தரம் அண்ணா ஒரு என்ஜினீயராகப் பல்வேறு நகரங்களில் வடநாட்டில் என்றெல்லாம் பணியாற்றி நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை கொண்டவராக, அவரது மக்களை டாக்டர்கள், என்ஜினீயர் என்று படிக்கவைத்து, வாழ்ந்து காட்டினார். நாட்டின் பிரதமர்கள், ஜனாதிபதிகள், மாநில முதல் மந்திரிகள், தொழில் அதிபர்கள் என்று மேல்மட்ட செல்வாக்கு நிறைய இருந்தும், பணி வாய்ப்புகளுக்காகவோ, பணி இடமாற்றங்களுக்காகவோ எவரையும் பரிந்துரைக்க வேண்டி அணுகியதே இல்லை. பிற்காலத்தே வசதிகள்

வாரிசுகளின் வளர்ச்சியின் மூலம் வந்து சேர்ந்தாலும், முன்பிருந்த எளிமையுடனேயே வாழ்ந்தவர் ஆவர்.

1960-ஆம் ஆண்டு இவரின் கைப்பிடித்து மனைவியான திருமதி சுசிலா மன்னி அவர்களும் எளிமையின் இருப்பிடமாகவே வாழ்கிறார். இக்குடும்பத்தினர் அனைவரின் வாழ்க்கை முறையைக் கூர்ந்து நோக்கினால் எளிமையும் பணிவும் ஓர் நூல் இழையாக தலைமுறை தலைமுறையாகப் பின்னிப் பரவி நிற்பதைக் காணலாம்.

சுந்தரம் அண்ணாவிடம் எந்த ஒரு எளிய தொண்டனும் மாற்றுக் கருத்துக்களை தைரியமாகக் கொண்டுசெல்லலாம். பிறர் கருத்தில் நியாயம் இருந்தால் ஏற்றுக்கொள்வார். தன்னைத் தூற்றி எழுதிய அன்பர்களிடம் கூட என்றுமே பகைமை பாராட்டியதில்லை. அவர்களை அடுத்து நேரில் காணும்போது அன்புடன் அணைத்துச் செல்வார். ஆஸ்ரமத்தையும், பகவானையும், வழக்காடு மன்றத்திற்கு இழுத்தவர் பெருமாள்சாமி என்ற அணுக்கத் தொண்டர். பிற்காலத்தே அவர் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டு வீதிகளில் அலையும் நிலை ஏற்பட்டது. அந்தத் தருணத்தில் திரு வெங்குட்டு அவர்கள் பகவான் அருளாசியுடன் அன்னம் இட்டு உதவியுள்ளார். தந்தையின் அதே குணம் சுந்தரம் அண்ணாவிடம் நிறையவே உண்டு. இந்தச் சமநோக்கு இவரின் தனித்தன்மை எனலாம்.

குழந்தை உள்ளம் கொண்ட சுந்தரம் அண்ணா ஆஸ்ரமத்திற்கு வரும் குழந்தைகளுக்கு ‘சாக்லேட்டு’ தாத்தா ஆவார். இவருக்கும் சாக்லேட்டு என்றால் மிகவும் பிடிக்கும். நோய்வாய்ப்பட்ட இறுதி நாட்களிலும் இவருக்கு உணவுடன் சாக்லேட்டு கொடுக்கத் தவறியதில்லை என்று சுசிலா மன்னி அவர் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதுண்டு.



தான் உடலை விட்டால், அந்த உடல் பொதுமக்கள் எரியூட்டப்படும் இடத்தில்தான் எரியூட்டப்பட வேண்டும். ஆஸ்ரமத்தில் இனி யாருக்கும் சமாதிக் கோவில் எழுப்புதல் கூடாது என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார். அதன்படியே இவர் உடல் பொது மயானத்தில்தான் எரியூட்டப்பட்டது. ஆனால் சுந்தரம் அண்ணா என்றும் ரமண அன்பர்களின் இதயத்தில் எழுப்பிக்கொண்ட சமாதி திருக்கோயிலில்தான் வசித்துக்கொண்டுள்ளார் .

சுந்தரம் அண்ணாவும் அவரது துணைவியார் சுசிலா மன்னியும் பாராயணப் பிரியர்கள். எந்தப் பாராயணம் ஆனாலும் இருவரும் தவறாது கலந்து கொள்வர் (மணி அண்ணாவின் துணைவியார் காலம் சென்ற ரமணி மன்னியும் கூட). ரமணரின் வாய்சொல்லும் பாடல்கள் அனைத்தையும் பாடி பகவான் துதி ஒன்றையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த சுந்தரம் அண்ணா அவர்களை பகவான் ரமணர் வானோரால் வாழ்த்துவிப்பார் என்பதிலே ஐயம் இல்லை.

வாழ்த்துநரை வானோரால் வாழ்த்துவிப்போனாகி அவர்
பாழ்த்த நரலைப் பிறவி பாற்றுவோன் தாள்வெல்க!

....ரமண புராணம் வரிகள் 143-4.

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### ஸம்வத்ஸர அபிஷேகம்

*மாத்ருபூதேஸ்வரர் திருக்கோயில் மற்றும் ஸ்ரீபகவான் சமாதி சந்நிதிக்கு கடந்த 2013-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதையொட்டி ஒவ்வொரு வருடமும் ஆச்ரமத்தில் சம்வத்ஸர சிறப்பு அபிஷேகம் நடைபெற்று வருகிறது. இவ்வருடம் நிலவும் அசாதாரண சூழ்நிலையையொட்டி சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் எதுவுமின்றி மிகவும் எளிமையாக மஹன்யாசம் மற்றும் கலசாபிஷேகத்துடன் 13-9-2020 அன்று ஸம்வத்ஸரம் நடைபெற்றது.*

### முருகனார் ஆராதனை

*ஒப்பற்ற தமிழ்ப் புலமை, ஆன்ம ஞான அனுபவம், சிறந்த குருபக்தி, தன்னடக்கம் முதலான தெய்வீகப் பண்புகள் ஒருங்கே அமையப்பெற்ற முருகனார் ஸ்ரீ ரமண பக்தர்களுள் பெரிதும் மதித்துப் போற்றுதற்குரியவர் ஆவார். பகவானைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பாடியறியாத முருகனார் 28-8-1973 ஆவணி அமாவாசை அன்று ஸ்ரீ பகவான் திருவடிகளில் கலந்தார். அன்னாரது சமாதி ஆச்ரம வளாகத்தில் அமைந்துள்ளது.*

*முருகனாரது ஆராதனை ஒவ்வொரு வருடமும் ஆச்ரமத்தில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு முருகனாரது 47-ஆவது ஆராதனை 18-8-2020 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் அபிஷேக ஆராதனைகளுடன் எளிமையாகக் கொண்டாடப்பட்டது.*

*இதேபோன்று ராமநாதபுரம் ஸ்ரீமுருகனார் மந்திரத்திலும், பூஜை, அன்னதானத்துடன் எளிமையாக ஆராதனை அனுசரிக்கப் பட்டது.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், மைலாப்பூர்

*தொடரும் அசாதாரணமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு ஸ்ரீ ரமண கேந்திரத்திலும் அன்பர்கள் தரிசனத்திற்கு அனுமதி இல்லை. நித்திய பூஜை மற்றும் பாராயணம் முதலியன எளியமுறையில் சமூக இடைவெளியுடன் நடைபெற்று வருகின்றன. நவம்பர் மாதம் 1-ஆம் தேதிவரை அன்பர்களுக்கு அனுமதி இல்லை.*

## குரோம்பேட்டை, ரமணாலயம்

*தற்போது நிலவும் அசாதாரணமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப் பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் நவம்பர் 1ஆம் தேதிவரை அன்பர்களுக்கு அனுமதி இல்லை. நித்திய நிகழ்ச்சிகளான பூஜை, பாராயணம் முதலியன தவறாமல் எளிய முறையில், சமூக இடைவெளியுடன் நடைபெற்று வருகின்றன.*

## மார்கபந்து சாஸ்திரிகள்



*திருவண்ணாமலை மாவட்டத்தில் பிறந்த ஸ்ரீ மார்கபந்து சாஸ்திரிகள் 1950 ஏப்ரல் 14-ஆம் தேதி பகவான் ரமணரின் மஹா நிர்வாணத்தில் கலந்து கொண்டவர். இயற்கையிலேயே சாத்விக சுபாவம் கொண்டவர். இவரது பணிவு, நம்பிக்கை, மௌனம் மற்றும் அசைக்க முடியாத இயல்பு ஆகியவற்றால் அனைவராலும் பெரிதும் மதிக்கப்பட்டார். கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஆச்ரமத்தில் நடைபெறும் ஸ்ரீ சக்ரா பூஜை, ஸ்ரீ வித்யா ஹவன், நவராத்திரி மற்றும் ஆசிரம கும்பாபிஷேகம் ஆகியவற்றில் அவர் தவறாமல் பங்கேற்றார். 2019 ஸ்ரீ வித்யா ஹோமத்திற்கான வழிபாட்டு முறைகளை மற்ற பண்டிதர்களுடன் இணைந்து ஓதினார். 1928-இல் பிறந்த இவர் தனது 92-ஆவது வயதில் கடந்த ஜூலை*

*18-ஆம் தேதி சென்னையில் அருணாசல ரமணரின் கமலபதம் அடைந்தார்.*

## G. கண்ணன்



*ரமண அன்பர் யாவராலும் அறியப்பட்ட, ஆச்ரம பாகசாலையில் மிகுந்த ஈடுபாட்டுடன் சேவை புரிந்துவந்த திரு. கண்ணன் அவர்கள் ஆகஸ்டு 20-ஆம் தேதியன்று தனது 68-ஆவது வயதில் பகவான் பதமடைந்தார். உள்ளூர் ING Vysya வங்கிப் பணியில் இருந்து 2010-ஆம் வருடம் ஓய்வுபெற்ற இவர் ஆச்ரமத்திற்கு சேவை செய்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். முக்கியமாக ஆச்ரம பாகசாலை மற்றும் சாப்பாட்டுக் கூடத்தில் மிகுந்த தன்னார்வத்துடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் தொண்டாற்றி வந்தார். அவர் வங்கியில் பணிபுரிந்தபோது ரமண பக்தர்களின் அனைத்து வங்கித் தேவைகளையும் கவனித்துக் கொண்டார். ஆச்ரம விழாக்களான பகவான் ஜயந்தி, ஆராதனை, மற்றும் மாத்ருபூதேசுவரர் மஹாபூஜை போன்ற கொண்டாட்டங்களின் சமயங்களில், உணவளிக்கும்போது கூடும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தினைக் கட்டுப்படுத்துவதில் அவர் வல்லவர். மேலும் நவராத்திரி சமயங்களில் யோகாம்பிகை அம்மனை ஊர்வலமாக எடுத்துச் செல்வதிலும் பங்கு கொள்வதை பக்தர்கள் அனைவரும் கண்டிருக்கலாம். ஆச்ரம சேவை செய்வது அவரது பரம்பரை இரத்தத்தில் ஊறியது. இவரது தந்தை கணபதிராமன் பகவானுடைய தாயாரது சகோதரர் ராமச்சந்திர ஐயர் அவர்களுக்கு தாய் வழியிலும் மற்றும் இவரது தாய் அனந்தலட்சுமி தந்தை வழியிலும் பேரக் குழந்தைகளாவர். கணபதிராமன் வங்கிச் சேவைகளில் இருந்து ஓய்வுபெற்றபிறகு 1983 முதல் 2007வரை அவரது வாழ்நாளில் இறுதிவரை ஆச்ரமத்தில் காசாளராக சேவை செய்துவந்தார். முன்னதாக, சட்ட விஷயங்களைப் பற்றி நன்கு அறிந்த கண்ணனின் தாத்தா ஸ்ரீராம ஐயர்,*

*அப்போதைய ஆச்ரம தலைவர் டி.என். வேங்கடராமன் பல நீதிமன்ற வழக்குகளை எதிர்த்துப் போராடியபோது பத்து வருடங்களுக்கும் மேலாக முக்கிய சட்ட உதவிகள் புரிந்தவர்.*

*கண்ணனுக்கு மனைவி ராதா, மகள் ரம்யா மற்றும் பேரக்குழந்தைகள் உள்ளனர். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## திருமதி ரக்ஷாபென்



*ஆச்ரம புத்தக வெளியீடு பொறுப்பாளராகச் சேவை செய்துவரும் திரு. டி.எஸ். வைத்யநாதன் அவர்களின் மனைவியார் திருமதி. ரக்ஷாபென் குஜராத் மாநிலம் அஹமதாபாதில் காலமானார். இறுதிக்காலத்தில் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த ஆகஸ்ட் 28-ஆம் தேதியன்று தனது 73-ஆவது வயதில் பகவான் பதமடைந்தார். அகில இந்திய வானொலியின் பஜன் பாடகியாகவும், பகவானின் ஆழ்ந்த பக்தராகவும் இருந்தார். பகவானது சம்ஸ்க்ருத பாராயணம், விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் சுந்தர காண்டம் பாராயணம் செய்வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

---

## ரமணோதயம்
## Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

---

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# அன்பிற்குரிய சுந்தரம் அண்ணா



## ஓர் நினைவாஞ்சலி

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

